# பெருநிலாவின்
## சிறு துளிகள்



சிவா தியாகராஜா

# பெருநினைவின் சிறு துளிகள்

சிவா தியாகராஜா
(சிவகாமசுந்தரி தியாகராஜா)

மனஓசை

# பெருநினைவின் சிறு துளிகள்

**சிவா தியாகராஜா (சிவகாமசுந்தரி தியாகராஜா)**

*மூன்றாம் பதிப்பு: டிசம்பர் 2024*

*தொகுப்பாசிரியர்கள்:*
*சந்திரவதனா செல்வகுமாரன்*
*சந்திரா இரவீந்திரன் (சந்திரகுமாரி)*

*அட்டை வடிவமைப்பு: மூனா*
*நூல் வடிவமைப்பு: சந்திரவதனா*
*வெளியீடு: மனஓசை*

# *Peruninaivin Siru Thulikal*

***Siva Thiyagarajah** (Sivagamasunthary Thiyagarajah)*

*3rd Edition: December 2024 © Manaosai, Germany*
*Compilation: Chandravathanaa Selvakumaran &*
*Chandra Ravindran (Chandrakumary)*
*Cover Design: Muunaa*
*Book design: Chandravathanaa*
*1st Edition: May 2020 © Manaosai, Germany*
*2nd Edition: June 2021 © Manaosai, Germany*
*© Chandravathanaa Selvakumaran*

*Printed in Stuttgart, Germany*
*Published by Manaosai, Germany*



***சிவா தியாகராஜா***(23.04.1934) *ஈழத்தில் பருத்தித்துறை, புலோலி மேற்கு, ஆத்தியடியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவரது முழுப்பெயர் சிவகாமசுந்தரி. இவரை சிவா, சுந்தரி, மொறிஸம்மா என்றெல்லாம் அழைப்பார்கள்.*

*1998 இலிருந்து ஜெர்மனியில் வாழ்ந்து வரும் இவர் 1999இலிருந்து தமிழாலய ஆசிரியராகப் பணியாற்றி புலத்திலும் தமிழ் வளர அருந்தொண்டு புரிந்தவர்.*

*தேசப்பற்று மிகுந்த இவர் தனது எட்டுப் பிள்ளைகளில் மூவரை ஈழவிடுதலைப் போருக்கு ஈந்தவர். ஈழத்திலும் பின்னர் புலம்பெயர்ந்து ஜெர்மனிக்கு வந்த பின்பும் தொடர்ச்சியாக ஈழ மண்ணின் விடுதலைப் போராட்டப் பணிகளில் பெரும்பங்காற்றியவர்.*

# உள்ளடக்கம்


1. வீரத்தாய் ........................................................07
2. நெஞ்சுறுதி கொண்ட எங்கள் அம்மா ...............09
3. என் கனவுகளிலும் நினைவுகளிலும் ..................15
4. என் அன்பு மகன் சபா!.......................................29
5. தென்பாண்டிச் சீமையிலே .................................35
6. முன்னம் வந்துதித்த மூத்த செல்வம் ....................39
7. அப்பா (என் அன்புக் கணவர்) ..........................47
8. எங்கு சென்றாய் என்னை விட்டு.....................57
9. பெத்தம்மாவும் பெத்தப்பாவும் ............................65
10. ப்ரிய பரதா!.........................................................75
11. மண்காக்கப் புறப்பட்டு விண்காக்கும் மொறிஸ் 77
12. வீர சுவர்க்கம் எய்திய வீரமறவன் மொறிஸ் ....78
13. ஓ... மொறிஸ், மாவீரனே!...................................79
14. நம் அருமைச் செல்வமே பரதா!..........................80
15. நம் அன்புச் செல்வமே பரதா!.............................81
16. அன்புச் செல்வமே ராஜன்!.................................82
17. எம் செல்வமே மயூரா! ........................................83
18. எம்மினிய மயூரனே! ...........................................84

# வீரத்தாய்

எனக்கு எனக்கேற்ற வீரத்தாய்தான் கிடைத்திருக்கிறா.

"நீ எந்த நேரத்திலும் எதிரிகளிடம் உயிருடன் பிடிபடக் கூடாது. அந்நிலை வருமெனில் சயனைற் அருந்தி விடு" என அம்மா எனக்குச் சொல்லியிருக்கிறா.

அம்மாவுக்கே இவ்வளவு உறுதி இருந்தால் எனக்கு எவ்வளவு உறுதி இருக்கும்.

-மொறிஸ்

## *முன்னுரை*

# *நெஞ்சுறுதி கொண்ட எங்கள் அம்மா*

*ஊருக்குள் பலரும் மொறிஸின் அம்மா, மயூரனின் அம்மா, சுந்தரியம்மா என்றெல்லாம் அவரை அன்பாக அழைப்பார்கள். மொறிஸுக்கு மட்டும் அவர் அம்மா இல்லை. மயூரனுக்கு மட்டும் அவர் அம்மா இல்லை. தான்பெற்ற பிள்ளைகளுக்கு மட்டும் அவர் அம்மா இல்லை. எங்கள் விடுதலைப் போராட்டத்தில் போராளிகளாக இருந்த எங்கள் அத்தனை பேருக்கும் அவர் ஒரு உன்னதமான அம்மாவாக இருந்தார்.*

*காணும் போதெல்லாம் நெஞ்சு நிறைந்த அன்பை எங்களில் சொரிந்துகொண்டிருந்த அம்மா! நாம் துவளும் போதெல்லாம் தட்டிக் கொடுத்து எம்மை உயிர்ப்புடன் செயற்பட வைத்துக் கொண் டிருந்த அம்மா! பசியோடு நாம் அவரின் வீடுதேடிச் செல்லும் போதெல்லாம் பரிவோடு உணவளித்த அம்மா! கண்ணை இமை காப்பது போல் எம்மைக் காத்திட்ட அம்மா! தான் பெற்ற பிள்ளைகள் போல் கட்டியணைத்து எமக்கு ஆறுதல் தந்த அம்மா!*

*அம்மாவைப் பற்றி இன்னுமின்னும் நிறையச் சொல்லிக் கொண்டே போகலாம்.*

*விடுதலைப்போராட்டத்தின் ஆரம்பகாலத்தில் போராட்டம் ஒரு கொரில்லாப் போர் வடிவிலேயே நிகழ்ந்துகொண்டிருந்தது. அச்சமயம் அதற்கு ஆதரவு தருவதற்கு பலரும் அஞ்சிக் கொண்டிருந்தார்கள். அவ் வேளையிலும் தைரியமாக, நம்பிக்கையோடு எங்களை வாரியெடுத்தணைத்து மலர்ந்தமுகத்தோடு உபசரித்து, தன் பாசத்தைக் கொட்டி உணவளித்து ஆதரித்த அம்மா!*

*மாவீரன் டேவிட் அண்ணை அம்மாவைத் தேடி எப்போது வந்தாலும் "எணை பசிக்குது... சாப்பாடு தாணை" என்று கேட்டபடியே சமைய லறைக்குள் நுழைந்து விடுவார். கடற்புலி வெங்கடேசனும் அப்படித்தான். சிலவேளைகளில் சாப்பாடு அங்கே முடிந்திருக்கும். வேறு யாராவது போராளிகள் வந்து சற்றுமுன்னர்தான் அம்மாவிடம் சாப்பிட்டுவிட்டுப் போயிருப்பார்கள். ஆனால் அது பற்றி அவர் எதுவுமே சொல்லாமல் அடுத்த சமைய லுக்கு அவசரமாக அடுப்பைமூட்டுவார். மொறிஸின் இளையக்கா(சந்திரா), பிரபாக்கா, தங்கை பாமா (பாமாச்சி) எல்லோரும் தமது பசியினைக் காட்டிக் கொள்ளாமல் எங்களை உபசரித்து அன்பாக அளவளாவிக் கொண்டிருப்பார்கள். அவர்களுக்குப் பல சமயங்களில் அங்கு சாப்பாடு இருக்காது. ஆனால் அம்மாவோ இருப்பவற்றை யெல்லாம் கொட்டி அவசரமாகச் சமைத்து வந்து எமக்குப் பறிமாறத் தொடங்கி விடுவார்.*

*நான் எத்தனையோ தடவைகள் மிகுந்த களைப்புடன் மொறிஸின் வீட்டிற்குச் சென்றிருக் கிறேன். அப்போதெல்லாம் பெடியளுக்காகவே வாங்கி வைத்திருக்கும் கொர்லிக்ஸ், போன்விற்றா எல்லாம் கலந்து, சுவையான தேநீர் தயாரித்து வந்து என்னிடம் தருவார் அம்மா. நாங்கள் பசிக் களையோடு இருக்கக் கூடாது என்பதில் அம்மா எப்போதும் கண்ணும் கருத்துமாக இருப்பார்.*

*இந்திய இராணுவக்காலத்தில் மொறிஸ் வீடு எப்போதும் இராணுவ அட்டகாசங்களில் அல்லோல கல்லோலப்பட்டுக் கொண்டேயிருக்கும். அங்கு போகவே உறவினர்களும் அயலவர்களும் அச்சப் படுவார்கள். ஆனால் அட்டகாசங்கள் முடிந்து அங்கிருந்து இராணுவம் வெளியேறிய மறுகணமே நாங்கள் வீட்டிற்குள் நுழைந்து விடுவோம். அம்மா அடுத்த கணமே மகிழ்ச்சியோடு எங்களுக்குச் சமைக் கத் தொடங்கி விடுவார். எவ்வளவு இராணுவக் கெடுபிடிகள்,ஊரடங்குகள் இருந்தாலும் அம்மாவின்,*

*முகம் நிறைந்த புன்னகை எப்போதும் போல எங்களை உற்சாகமாக வரவேற்கும்.*

*நாங்கள் சில நாட்கள் அங்கு செல்லவே முடியாமல் எங்காவது ஒளிந்திருக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் எத்தனையோ தடவைகள் வந்திருக்கின்றன. அச் சமயங்களில் எங்களைத் தேடி யாராவது வருவார்கள். "வந்து சாப்பிட்டு விட்டுப் போங்கள்" என்று அவர்களிடம் அம்மா தூது அனுப்பி விட்டிருப்பார்.*

*எண்பதுகளின் நடுவில் மொறிஸ், மயூரன் குடும்பத்தினர் இராணுவக் கெடுபிடிகள் தாளாமல் யாழ்ப்பாணத்திற்குப் போய் விட்டார்கள். அப்போது அவர்கள் மொறிஸின் அப்பாவின் உத்தியோக மனையில் குடியிருக்கிறார்கள் என்று கேள்விப் பட்டிருந்தோம்.*

*நீண்ட மாதங்கள் அம்மாவையும் அவரின் குடும்பத்தினரையும் காணாமல் நாங்கள் உள்ளூரப் பெருந் துயருற்றிருந்தோம்.*

*கடைசியாக, மொறிஸ் 1989இல் வீர மரண மடைந்த கொடுந் துயரமான நிகழ்வுகள் யாவும் நடந்து முடிந்த பின்னர், நான் யாழ்ப்பாணத்தில் சில இரகசிய விடுதலைப் பணிகளிற்காக நியமிக்கப் பட்டிருந்தேன். இந்தியஇராணுவத்துடன் இணைந்து மாற்றியக்கங்களும் எம்மைத் தேடியலைந்து கொண் டிருந்த நேரமது. ஒரு நாள், மொறிஸ் குடும்பத் தினர் குடியிருந்த யாழ்ப்பாண வீட்டை சைக்கிளில் கடந்து செல்ல வேண்டிய சந்தர்ப்பம் எனக்கேற் பட்டது. அப்போது, ஒருமுறையேனும் அவர்களைப் பார்க்காமல் கடந்து செல்ல எனக்கு மனம் இடம் தரவில்லை. அம்மாவையும் இளையக்கா, பாமாச்சி எல்லோரையும் ஒரு தடவையேனும் கண்டு ஒரு வார்த்தையாவது பேசி விட்டுப் போகலாமே என் றெண்ணி, என் மனம் என்னை அந்த வீட்டின் பக்கம் இழுக்கத் தொடங்கியது.*

*யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் அவர்கள் குடியிருக்கும் அந்த வீட்டினைச் சுற்றி இராணுவ முகாம்களும் சென்றிப் பொயின்ற்றுகளும் நிறைந்து வழிந்திருந்தன. எவருமே போக அச்சப்படும் அந்த இடத்தில் இக்கட்டான ஒரு சூழ்நிலையில் துப்பாக்கி களுக்கு மத்தியில் அவர்கள் வாழ்ந்து கொண்டிருந் ததைப் பார்க்க எனக்கே மனசு அஞ்சியது.*

*நான் சொல்லாமல் கொள்ளாமல் அந்த வீட்டுக்குள் திடீரென்று நுழைந்தேன். வாசலுக்கு வந்த அம்மா கண்கள்விரிய வியப்போடு என்னைப் பார்த்தார். அடுத்த கணமே மகிழ்ச்சி பொங்க, புன்னகையோடு, இரகசியக் குரலில் என்னை வரவேற்றார். உடனேயே ஓடிச் சென்று சுடச்சுடப் புட்டும், கத்தரிக்காய்க்குழம்பும் முட்டைப்பொரியலும் கொண்டு வந்து தந்து "களைச்சிருக்கிறாய் அப்பு. முதல்ல சாப்பிடு. பிறகு கதைக்கலாம்" என்றார்.*

*எனக்குக் கண்களில் கண்ணீர் நிறைந்து பொங்கியது. நான் பொங்கிய கண்ணீரைத் துடைக்கவில்லை. எனக்கு ஏற்கெனவே பசி. தலை சுற்றுவது போல் உணரத் தொடங்கியிருந்த நான் கைகளைக் கழுவிவிட்டு மளமளவென்று சாப்பிடத் தொடங்கினேன். அந்நேரம் அவ்வுணவு எனக்கு அமிர்தம் போலத் தோன்றியது. அம்மா என்னைப் பரிவோடு பார்த்தபடி இருந்தார்.*

*திடீரென்று வெளியில் ஏதோ சத்தங்கள் கேட்கத் தொடங்கின. நான் பரபரப்பானேன்.*

*"நீ... சாப்பிடப்பு. நான் போய் என்னெண்டு பார்த்துக் கொண்டு வாறன்" என்றார் அம்மா.*

*நான் "இப்பப் போக வேண்டாம்" என்று கையைக் காட்டித் தடுத்தேன்.*

*ஆரியகுளச் சந்திப்பக்கம் கேட்டுக் கொண் டிருந்த இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுச்*

சத்தங்களைத் தொடர்ந்து இராணுவ 'றக்' ஒன்று வேகமாக அவர்களின் வீட்டைக் கடந்து போனது. எனக்கு நெஞ்சு திக்கென்றது. நான் உயிரோடு இருக்கும் கடைசித் தருணம் அது தான் என நினைத்தேன்.

வீட்டின் பின்புறம் யாழ்ப்பாணத்தின் மிகப் பெரிய இராணுவ முகாம். பின்வழியாக நான் ஓடித் தப்பவே முடியாது.

சத்தங்கள் மெல்ல மெல்லக் குறைந்ததும் அம்மா வெளியில் இறங்கி, கேற் வாசல் வரை போய் வீதியை இருபுறமும் பார்த்து விட்டு வந்தார்.

"இப்பச் சந்தடி ஒண்டும் இல்லை. எல்லாரும் போயிட்டான்கள். றோட் வெறிச்சோடிப் போய்க் கிடக்கு" என்றார்.

நான் கைகளைக் கழுவிவிட்டு, தண்ணீரை மடமடவென விழுங்கியபடி சைக்கிளை எடுத்துக் கொண்டு "போட்டுவாறன் அம்மா.." என்றேன். என் வாய்க்குள்ளிருந்து சத்தம் வர மறுத்தது. கண்கள் என்னையும் மீறி பொங்கிவழியத் தயாராக இருந்தன.

அம்மா தெளிவாகவும் உறுதியாகவும் சொன்னார் "எல்லாம் நல்ல படி நடக்கும் அப்பு. தைரியமாய், கவனமாய் போயிட்டு வா" என்று. அதுதான் நான் அம்மாவைக் கண்ட கடைசி நாள்!

இப்போது எங்கள் அன்பு அம்மா மேலை நாடொன்றில் எங்கள் மண்ணை நினைந்த படியே வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்று கேள்விப் பட்டேன். நானோ அவரை நேரில் சென்று சந்திக்க முடியாத நிலையில் வேறொரு நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். எங்கள் மேல் அம்மா வைத்திருந்த அளவற்ற அன்பும், அசைக்க முடியாத நம்பிக்கையும்தான் இத்தனை அழிவுகளின் பின்னும்

*இத்தனை இழப்புகளின் பின்னும் இத்தனை துயரங்களின் பின்னும் என்னை இன்னும் உயிரோடு வாழ வைத்துக்கொண்டிருக்கிறதென்று நான் நம்புகிறேன்.*

*விடுதலையே தன் உயிர்மூச்செனை எண்ணி எங்கள் எல்லோருக்குமாகவே வாழ்ந்து கொண்டிருந்த எங்கள் அன்பு அம்மா இன்னும் நெடுங்காலம் நீடூழி வாழவேண்டும்!*

*உங்கள் அன்புக்கும் பாசத்துக்கும் பரிவுக்கும் நெஞ்சுறுதிக்கும் முன்னால் நான் என்றும் தலை வணங்கி நிற்கிறேன் அம்மா!*

*–றியோ நிலவன்*

# *என் கனவுகளிலும் நினைவுகளிலும்..!*

***"நான் போர் முனையில் குருதி வெள்ளத்தில் நிற்கிறேன். மீண்டும் நிச்சயமாகத் திரும்பி வருவேன். ஆனால் உங்கள் கனவுகளிலும் நினைவுகளிலும் மட்டுமே" - கப்டன் மொறிஸ்(பரதன்)***

*அது அவன் சொன்ன வரிகள். அந்த வரிகளை இப்போதும் நான் நினைத்துப் பார்க்கிறேன். அவை வெறும் வரிகள் அல்ல. அது அவனது மனதினுள் இருந்த உண்மையான எதிர்வு கூறல். அவன் அதனைக் கூறும் போது சிரித்த முகத்துடனே தான் கூறுவான். அதனால் அதன் கனத்தை அப் போது என்னால் உணர முடியவில்லை. இப்போது எல்லாவற்றையும் யோசித்துப் பார்க்கிறேன்.*

*எத்தனை விடயங்களை வெகு சாதாரணமாகக் கடந்து வந்து விட்டேன்! ஆச்சரியமாக இருக்கிறது! ஒரு பெரும்போரை, பேரிழப்புகளை, துயரங்களை, பயங்கரங்களை, ஆபத்துக்களை, அழுகைகளை, சிரிப்புகளை.. என எல்லாவற்றையும் எப்படிக் கடந்து வந்திருக்கிறேன்! நினைத்துப் பார்க்கப் பிரமிப்பாக இருக்கிறது.*

*பரதன் எனக்கு ஆறாவது பிள்ளை. 1969ம் ஆண்டு செப்டெம்பர் 12ம்நாள் பிறந்தான். அவனை எல்லோரும் 'தகப்பனைப் போலவே தோற்றத்தில் இருக்கிறான்' என்று சொல்வார்கள். எப்போதும் சிரித்த முகம். கலகலப்பு நிறைந்த எங்கள் குடும்பத்தில் மேலும் கலகலப்பூட்டுபவனாக அவன் இருந்தான். நகைச்சுவை அவனின் உடல் முழுவதும் பரவிக் கிடக்கிறதோ என்று நான் யோசிப்பதுண்டு.*

*ஆனால் அந்தக் கலகலப்பு நீண்ட காலம்*

*நிலைத்திருக்கவில்லை. எல்லாக் குடும்பங்களைப் போலவும் சந்தோசமும் கலகலப்பும் நிறைந்த எங்கள் குடும்பத்திலும் துயர்படியும் நாட்கள் மெல்ல மெல்ல ஆரம்பமானது. 1983 யூலைக் கலவரம் எங்கள் சந்தோசங்களுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைப்பதற்கு கட்டியம் கூறுவது போல் நாடெங்கும் தமிழ்மக்கள் மீது தாக்குதல்கள் ஆரம்பமாகியிருந்தன. அந்நேரம் எனது கணவரும் எனது மூத்த மகனும் சிங்களவர்கள் அதிகமாக வாழும் தென்னிலங்கையில் வேலை பார்த்துக் கொண்டிருந்தார்கள். இந்தக் கலவரத்தில் அவர்கள் மயிரிழையில் உயிர்தப்பி வந்தார்கள். ஆனால் எமக்குத் தெரிந்த நூற்றுக் கணக்கான உறவினர்கள், நண்பர்கள், ஊரவர்கள் எனப் பலர் இக்கலவரத்தில் மிகக் கொடூரமாகத் தாக்கப்பட்டுக் கொல்லப் பட்டிருந்தார்கள். இந்தக் கலவரத்தின் தாக்கம் எல்லோரையும் மிகவும் பாதித்திருந்தது. அது எங்கள் குடும்பத்தையும் விட்டு வைக்கவில்லை. இதுவே என் மகன் பரதனையும் விடுதலைப் போராட்ட உணர்வுக்குள் இழுத்துச் சென்றிருக்க வேண்டும்.*

*அவன் கதைகள் கேட்பதில் மிகுந்த ஆர்வம் உள்ளவன். அப்பாவிடம் கதைகள் கேட்டுக் கேட்டே வளர்ந்தவர்கள் என் பிள்ளைகள். அப்பா சொல்லும் சமயக் கதைகள், சரித்திரக் கதைகள், அரசியல் கதைகள்... எல்லாம் நாளும் பொழுதும் பிள்ளைகளின் சிந்தையைத் தீட்டிக் கொண்டே இருந்திருக்கின்றன. இதுவே பரதனையும் அவனது இளவயதில் ஒரு திடமான நேர்மையான துணிச்சலான முடிவினை அவனுக்குள் எடுப்பதற்கு உந்துகோலாக அமைந்திருக்கிறது.*

*நான் அவனைத் தடுக்கவில்லை. காலம் அப்படி இருந்தது. அவன் எடுத்த முடிவு தேவையானது என்றும் அவசியமானது என்றும் எனக்குத் தோன்றியது. உறவினர்கள் என்னைப் பேசினார்கள். "அவனின் முடிவினைமாற்றி அவனைத் திருப்பி அழை" என்று என்னை வற்புறுத்தினார்கள்.*

*ஆனால் நான் அதனை ஏற்கவும் இல்லை. அதனைச் செய்யவும் இல்லை. அவன் மேலும் சில காலம் படித்து, அந்தப் படிப்பை பூரணமாக முடித்து விட்டுப் போயிருக்கலாம் என்று மட்டுமே மனசுக் குள் யோசித்தேன். அவ்வளவுதான்.*

*'எமக்கானதெல்லாம் கிடைத்து விட்டால்... எல்லோரும் சந்தோசமாகப் படிக்கலாம்' என்றுதான் நான் நினைத்தேன். ஆசைப்பட்டேன். அது நடக்கும் என்றும் மிகவும் நம்பினேன்.*

*அவன் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து கொண்டான். அவர்களது கட்டுப்பாடுகளுக்கமைய பயிற்சிகள்பெற்று பருத்தித் துறைப் பிரதேசப் பொறுப்பாளராகவும் பணிகளைச் செய்யத் தொடங்கினான்.*

*அவன் பருத்தித்துறைப் பிரதேசப் பொறுப் பாளராக இயங்கிக் கொண்டிருக்கும் போது இந்திய இராணுவம் திடீரென்று இலங்கைக்கு வந்து சேர்ந் தது. ஆரம்பத்தில் இந்திய இராணுவத்தின் வரவை நாங்கள் மகிழ்ச்சியுடன்தான் ஏற்றுக் கொண்டோம். நாளடைவில் அவர்களின் இலக்கு என்ன என்பதை அறியத் தொடங்கியபோது எங்கள் எல்லோருக்கும் ஏற்பட்ட ஏமாற்றமும் துயரமும் சொல்லில் அடங் காதவை! அவர்கள் இலங்கையின் வடபகுதியையும் கிழக்குப் பகுதியையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விடுதலைப் போராளிகளை தமது கைப்பாவைகளாக்க முயற்சித்துக் கொண்டிருந்தார் கள். அப்போதுதான் நிலைமையே தலைகீழாக மாறத் தொடங்கியது. இந்திய இராணுவம் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிராகவும் அப்பாவித் தமிழ் மக்களுக்கு எதிராகவும் தமது செயற்பாடுகளையும் தாக்குதல்களையும் ஆரம்பித்திருந்தது. இது நாம் வாழ்வில் ஒருபோதும் எதிர் பார்க்காதது.*

*அந்நேரம் பருத்தித்துறைப் பிரதேசப் பொறுப் பாளராக இருந்த என் மகன் பரதனைத் (மொறிஸ்)*

*தேடி அவர்கள் வலை வீசிக் கொண்டிருந்தார்கள். அவனைத் தேடுவதாகச் சொல்லி பருத்தித்துறையில் இருக்கும் அப்பாவி இளைஞர்களைப் பிடித்து சித்திர வதை செய்வதும் சுட்டுக் கொல்வதுமாக நிலைமை மோசமாகப் போய்க் கொண்டிருந்தது. அமைதிகாக்க வந்தபடை ஆக்கிரமிப்புப் படையாக மாறியிருந்தது. மொறிஸைத் தேடி அவர்கள் கொலைவெறி பிடித்த வர்கள்போல அலைந்து கொண்டிருந்தார்கள். புலிப் போராளிகள் பலரைச் சல்லடை போட்டுத் தேடிப் பிடித்து ஈவு, இரக்கம் இன்றிக் கொலை செய்து கொண்டிருந்தார்கள்.*

*பரதன்(மொறிஸ்) மிகவும் நேர்மையானவன். எல்லோரிடமும் அன்பும் அக்கறையும் கொண்டவன். மக்களின் கஷ்டங்களைப் புரிந்து நேரில் சென்று அவர்களுக்கான உதவிகளைச் செய்பவன். அதனால் அவனை நேசிக்காத மக்களே கிடையாது. எல்லோரும் என்னிடம் வந்து அவனின் நல்ல பண்புகளைக் கூறிப் பாராட்டுவார்கள். அவனின் பண்பை, வீரத்தை, துணிச்சலைக் கூறி வியந்து நிற்பார்கள். அது எனக்கு மிகுந்த பெருமையாக இருக்கும். ஆனால் அவற்றைக் கண்ணாரக் கண்டு, அந்த மக்களோடு மக்களாக வாழ்ந்து அனுபவிப்ப தற்குக் காலம் எனக்கு இடம் தரவில்லை.*

*இந்தச் சமயம் எனது அடுத்த மகன் சபாவும்(மொறிஸின் தம்பி மயூரன்) விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தன்னை இணைத்துக் கொண்டு விட்டான். தொடர்ந்த நாட்களில் அவன் சிறப்புப் பயிற்சிகளைப் பெற்று தலைவரின் இருப்பிடப் பகுதிக்கு அழைத்துச் செல்லப் பட்டு விட்டானென எமக்கு இரகசியச் செய்திகள் வந்து சேர்ந்தன.*

*இந் நிலையில் இந்திய இராணுவமோ அல்லும் பகலும் எங்கள் வீட்டிற்கு வந்து "மொறிஸ் எங்கே? மொறிஸ் எங்கே?" என்று கேட்டு எம்மை சித்திரவதைப் படுத்தத் தொடங்கி விட்டது. அந்தச்*

*சமயம் என் சின்ன மகள் பிரபாவின் கணவரான கணேசை(டக்கி)யும் சிங்கள இராணுவம் கைது செய்து கொண்டு போய் பூசா கடற்படைத்தடுப்பு முகாமில் வைத்திருந்தது. அவரின் கைது அவருக்கும் எங்களுக்கும் மேலும் எத்தனை ஆபத்துக்களை ஏற்படுத்துமோ என்ற அச்சம் ஒருபுறம், துயரம் ஒரு புறம் என நாங்கள் பட்ட அவஸ்தைகள் சொல்லில் வடிக்க முடியாதவை!*

*தினமும் எங்கள் வீடு தேடி வரும் இந்திய இராணுவத்தினர் எங்களுக்குச் செய்யும் அட்டூழியங்கள் வர வர அதிகரித்துக் கொண்டேயிருந்தன. அவற்றைத் தாங்க முடியாமல் நானும் எனது இரண்டு மகள்மாருமாக எமது வீட்டை விட்டுப் புறப்பட்டு யாழ்ப்பாணத்திற்குச் சென்று விட்டோம். அப்போது எனது கணவர் யாழ்ப்பாணம் புகையிரத நிலைய அதிபராக அங்கு வேலை பார்த்துக் கொண்டிருந்தார். என் இளையமகள் சந்திராவும் யாழ்ப்பாணம் கச்சேரியில்தான் வேலை பார்த்துக் கொண்டிருந்தாள். அதனால் யாழ்ப்பாணத்தில் குடியிருப்பது எங்கள் எல்லோருக்கும் வசதியாகவும் கொஞ்சம் பாதுகாப்பானதாகவும் இருக்கும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருந்தது. அங்கே யாழ். புகையிரத நிலையத்தை அண்டியிருக்கும் என் கணவரது ரெயில்வே பங்களாவில் நாம் குடி கொண்டு விட்டோம். அங்கும் எமது பங்களாவைச் சுற்றி இந்திய இராணுவ முகாம்களும் சென்றிப் பொயின்றுகளும்தான். ஆனாலும் பருத்தித்துறையில் நிலை கொண்டிருக்கும் இராணுவத்தினரிடமிருந்து கொஞ்சமாவது தொலைவிற்கு வந்து விட்டோம் என்ற ஒரு ஆறுதல். அவ்வளவுதான்.*

*நாங்கள் ஊரைவிட்டு யாழ்ப்பாணத்திற்கு வந்து விட்டாலும் பருத்தித்துறையில் என் மகன் எத்தனை சிரமப் படுகிறானோ என்று எனக்கு ஒரே யோசனையாகவே இருக்கும். இராணுவச் சுற்றி வளைப்புகளுக்கு மத்தியில் அவனும் பெடியளும் எங்கு சென்று சாப்பிடுவார்கள், எப்படித் தம்மைப்*

*பாதுகாத்துக் கொள்வார்கள் என்ற தவிப்பு எப்போதும் எனக்குள் இருந்து கொண்டேயிருக்கும்.*

*இந்திய இராணுவம் "மொறிஸைப் பிடித்தே தீருவோம்" என்று கங்கணம் கட்டிக் கொண்டு திரிகிறது என்ற செய்திகள் நாளும் பொழுதும் ஒவ்வொருவர் ஊடாகவும் எமக்கு வந்த வண்ணமே இருந்தன. ஒவ்வொரு நாட்களும் எங்களுக்குக் கலக்கமானதும் பதட்டமானதுமான நாட்களாகவே இருந்திருக்கின்றன. அவனைப் பார்த்து விட்டு வந்தால் மனம் ஆறும் என்ற நிலையில் நானும் என் மகள் சந்திராவுமாக ஒவ்வொருவாரமும் இராணுவக் கெடுபிடிகளினூடாகப் பஸ்ஸில் பயணம் செய்து போய் அவனைப் பார்த்து விட்டு வருவோம். சந்திராவை அவன் 'இளையக்கா..' என்று தான் அழைப்பான். அவனது தோழர்களும் அப்படித்தான் அழைப்பார்கள். அவள் தனது சம்பளம் வந்ததும் அவனுக்காக ஒரு தொகையை என்னிடம் தருவாள். எனது கணவரும் அவனுக்காக அவ்வப்போது பணம் தந்துவிடுவார். நான் அவற்றைச் சேர்த்துக்கொண்டு போய் அவனிடம் கொடுத்து "பசியோடிராமல் எல்லாருமாகச் சாப்பிடுங்கோ.." என்று சொல்லி அவர்களுடன் உரையாடி விட்டு வருவேன். அது அவனுக்கும் அவனோடு நிற்கும் அவனது நண்பர் களுக்கும் மிகுந்த மகிழ்ச்சியையும் உற்காகத்தையும் கொடுக்கும். என் மனதிற்கும் மிகுந்த ஆறுதலாக இருக்கும்.*

*எங்கள் பருத்தித்துறை வீட்டில் அப்போது எனது கணவரின் தாயார்(என் பிள்ளைகளின் அப்பாச்சி) மட்டுமே தனியாக இருந்தா. அவ தன் சமையல், குளிப்பு, படுக்கை யாவற்றையும் தனியாகவே கவனித்துக் கொண்டிருந்தா. சில சமயங்களில் எங்களால் பருத்தித்துறைக்குப் போக முடியாமல் நிலைமை மோசமாகியிருக்கும். அந்தத் தருணங்களில் மொறிஸ் அங்கு வந்து "அம்மா வந்தவவோ? இளையக்கா வந்தவவோ?' என்று மிகுந்த ஏக்கத்துடன் அப்பாச்சியைக் கேட்டுவிட்டுப்*

போவானாம். பின்னர் எங்களைக் காணும் போது அப்பாச்சி சொல்லுவா. அதனைக் கேட்கும் போது துயரம் எங்களை வாட்டி எடுக்கும்.

*1989 மார்ச்சில் ஒரு வெள்ளிக்கிழமை பின்னேரம் சந்திராவும் பாமாவும் அவனைப் பார்ப்ப தற்காக பருத்தித்துறை நோக்கி பஸ்ஸில் புறப்பட் டார்கள். சந்திரா தனது சம்பளத்தில் அவனின் செலவுக்குப் பணமும் கொடுத்து, இரண்டு நாட்கள் ஊரில் நின்று, பெடியளுக்கு விருப்பமான சாப்பாடு களும் ஏதும் செய்து கொடுத்து விட்டு வரப்போவ தாகக் கூறிவிட்டுத் தான் பாமாவையும் கூட்டிக் கொண்டு புறப்பட்டாள். அன்று யாழ்ப்பாணம் முழுவதுமே சற்றுப் பதற்றமாகத்தான் இருந்தது. இராணுவச் சோதனைச் சாவடிகளில் சோதனைகள் வலு உக்கிரமாக நடந்து கொண்டிருந்தன. இந்த நிலையில் அவர்கள் போவது எனக்கு யோசனை யாகத்தான் இருந்தது. ஆனாலும் அவர்கள் துணிச்ச லுடன் புறப்பட்டு விட்டார்கள்.*

*அங்கு போய்ச் சேர்ந்ததும், சந்திரா மொறிஸையும் தோழர்களையும் மறுநாள் சாப்பிட வரும்படி ஆளனுப்பிச் சொல்லி விட்டு, தோசைக்கு அரைத்துக் குழைத்து வைத்து விட்டு, மறுநாள் அதிகாலை எழுந்து அம்மியில் சம்பல் அரைத்துக் கொண்டிருந்திருக்கிறாள். அச்சமயம் பார்த்து மொறிஸைத் தேடி வீட்டுக்குள் புகுந்த இந்திய இராணுவத்தினர் தோசைமாப் பானையை இழுத்துக் கொட்டி, அம்மியில் சம்பல் அரைத்துக் கொண்டு இருந்த சந்திராவையும் வீடு சுத்தம் பண்ணிக் கொண்டிருந்த பாமாவையும் பிடித்து, சித்திரவதை கள் செய்து மந்திகை இராணுவ முகாமிற்குக் கொண்டு சென்று விட்டார்கள். முகாமில் அவர் களைப் போலவே வேறும் பல இளம் பெண்களைக் கொண்டு வந்து பணயக் கைதிகளைப் போல வைத்திருந்தார்கள். அங்கு நடந்த விசாரணைகளும் மரணப் பயமுறுத்தல்களும் தனியான ஒரு கதை. அந்தக் கொடுமைகளையெல்லாம்கடந்து அங்கிருந்து*

விடுபட்டு மறுநாள் இரவு அவர்கள் ஏதோ விதமாக யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தமை ஒரு பெரிய கதை.

அந்தச் சம்பவத்திற்குப் பின்னர் நாங்கள் மொறிஸைப் பார்ப்பதற்காக எங்கள் சொந்த வீட்டின் பக்கமே போவதில்லை. இராணுவம் எப்போதும் எங்கள் வீட்டைக் குறிவைத்துப் பார்த்த படியே இருக்கிறது என்பதை நன்றாகப் புரிந்து கொண்டோம். அதனால் மொறிஸிலும் எங்கள் குடும்பத்திலும் பெரிதும் அன்பு கொண்ட ஐயனார் கலட்டி திருநாவுக்கரசு மாஸ்ரர் வீட்டுக்குத்தான் நேராகச் செல்வோம். அங்கு போனால் அவரின் மகன் ராசு, பெடியள் நிற்கும் இடம் தேடிப் போய் நாமங்கு வந்திருப்பது பற்றி அறிவித்து விட்டு வருவான். அதன் பின்னர் மொறிசும் அவனது நண்பர்களும் அங்கு வந்து எம்மைச் சந்தித்துக் கதைத்துப் போவார்கள்.

கடைசியாக நான் போய் மொறிஸைச் சந்தித்த நாளை என்னால் மறக்கவே முடியாது. அது 1989 ஏப்ரல் மாதம் 27ம் திகதி. அவனின் மூத்தக்கா வதனா ஜேர்மனியிலிருந்து அவனுக்காக 200மார்க்குகள்(200DM) அனுப்பி வைத்திருந்தாள். அவனையும் தோழர்களையும் சந்தித்து, அந்தப் பணத்தையும் அவனிடம் கொடுத்து வருவதற்காக அன்று நான் ஊருக்குப் போயிருந்தேன். அன்றும் மாஸ்ரர் வீட்டிற்குத்தான் நேராகப் போனேன். வழமை போல் அவரின் மகன் ராசு குறிப்பிட்ட இடத்திற்குப் போய் அறிவித்து விட்டு வந்தான்.

அன்று மொறிஸ் சற்றுத் தாமதமாகத்தான் வந்து சேர்ந்தான். அவன் வரும் போது நேரம் மதியம் ஒரு மணியிருக்கும். அன்றைக்கு அவனின் முகத்தில் யோசனை நிறைந்திருந்தது. திருநாவுக்கரசு மாஸ்ரரின் மனைவி தேவியும் அவவின் தங்கையு மாக சோறு கறி சமைத்து, எனக்கும் அவனுக்கும் அன்போடு மதியஉணவு பரிமாறினார்கள். அவனின் யோசனை நிறைந்த முகம் என் மனதை என்னவோ

*செய்தது. நிறையக் கதைக்க முடியாமல் எங்கள் இருவரது மனங்களும் சோர்வுடன் இருப்பது போல் தோன்றியது.*

*நாங்கள் இருவரும் சாப்பிட்டு முடிந்ததும் மாஸ்ரரின் மனைவி எங்களின் கைகளைக் கழுவு வதற்காக ஒரு பாத்திரத்தில் தண்ணீரைக் கொண்டு வந்து மேசையில் வைத்தார். நான் கைகளைக் கழுவிவிட்டு வெளிவராந்தாவில் இருந்த வாங்கிலில் அமர்ந்து கொண்டேன். மொறிஸ் என்னருகில் வந்து அமர்ந்தான். அடுத்த கணமே தன் தலையை என் மடியின் மீது வைத்துச் சாய்ந்து படுத்தான். அவனின் கையிலிருந்த துப்பாக்கி அவனருகில் சுவரோடு சாய்ந்து கிடந்தது. ஒரு விடுதலைப் போராளிக்குரிய தடித்த அங்கியுடனும் இடுப்பில் சொருகியிருக்கும் கிரனைற்றுடனும் துப்பாக்கியுட னும் எப்படி இவர்களால் வசதியாகத் தூங்க முடியுமென நான் எப்போதும் யோசிப்பதுண்டு. அப்போதும், அவனைப் பார்த்த அந்தக் கணத்தில் என் மனதிற்குள் அந்த ஆதங்கம் தான் ஏற்பட்டது. 'இவற்றையெல்லாம் கழற்றியெறிந்து விட்டு நிம்மதி யாக, ஆறுதலாக எப்போதுதான் இவன் தூங்கப் போகிறானோ, எப்போதுதான் அதற்கான காலம் வரப்போகிறதோ?' என்ற கலக்கமான யோசனை யுடன் "ஏனப்பு சரியா யோசிக்கிறாய்? என்ன பிரச்சனை..?" என்று கேட்ட படியே அவனின் தலைமுடியை மெதுவாகக் கோதி விட்டேன்.*

*அன்று அவனின் முகத்தில் வழமையான அந்த மலர்ந்த சிரிப்பைக் காணவில்லை. "மூத்தக்கா காசு அனுப்பியிருக்கிறா" என்று சொல்லி அந்தப் பணத்தை அவனிடம் கொடுத்தேன். சட்டென்று ஒரு ஒளிக்கீற்று அவனின் முகத்தில் மின்னி மறைந்தது. உடனேயே அதனை அங்கு நின்றிருந்த தேவியக்காவிடம் கொடுத்து "அடுத்த சனிக்கிழமை பெடியள் எல்லாருக்கும் சாப்பாடு செய்யுங்கோ" என்று சொன்னான். அப்போது சாயந்தரம் மூன்று மணியிருக்கும்.*

*சடாரென்று எழுந்து அமர்ந்தான். "அம்மா நீங்களும் இருள முதல் வீட்டை போங்கோ. மிக்க சந்தோசம் எண்டு மூத்தக்காட்டைச் சொல்லுங்கோ நான் அவசரமாப் போகோணும்" சொல்லியவாறே முற்றத்தில் இறங்கி, கேற்றை நோக்கி நடந்தான். கேற்றடியில் நின்று திரும்பிப் பார்த்து, கையை அசைத்து விட்டு வேகமாக மறைந்து விட்டான்.*

*'கடவுளே... எப்பதான் இந்தப் பிள்ளை ஆறுதலாகச் சரிந்து படுக்க நேரம் கிடைக்கப் போகுதோ..' மீண்டும் மனதிற்குள் அதே கலக்கமும் தவிப்பும். அது தான் என் மகன் மொறிஸை நான் சந்தித்துக் கொள்ளும் கடைசித் தருணம் என்பது அப்போது எனக்குத் தெரியாது!*

*ராசு என்னைச் சைக்கிளில் ஏற்றிச் சென்று யாழ்ப்பாண பஸ்ஸில் ஏற்றி விட்டான். நான் யாழ். வீடு போய்ச் சேர இரவு ஏழு மணியாகி விட்டது. போய்ச் சேர்ந்தவுடன், பிள்ளைகள் ஓடி வந்து "அம்மா பரதனைக் கண்டனிங்களோ? காசு கொடுத் தனிங்களோ..?" என்று ஆர்வத்தோடு கேட்டார்கள். நான் சந்தித்த விபரங்களையெல்லாம் சொன்னபடி கதிரையில் அமர்ந்திருந்தேன். சந்திரா ஓடிப்போய் சுடச்சுட தேநீர் போட்டுக் கொண்டு வந்து தந்தாள். அவனைச் சந்தித்து விட்டு வந்தேன் என்பதில் எல்லோருக்கும் ஒருவித ஆறுதலாக இருந்தது.*

*மூன்று நாட்கள் கடந்திருக்கும். அது 1989ம் ஆண்டு மே,1ம்திகதி. திங்கட்கிழமை. என் மைத்துனி சிவநேசமும் ஒன்று விட்ட சகோதரி வடிவமும் பருத்தித்துறையிலிருந்து பஸ்ஸில் பயணித்து வந்து எங்கள் பங்களாவிற்குள் நுழைவது தெரிந்தது. நான் யோசனையோடு பார்த்த படி நின்றிருந்தேன். என்னைக் கண்டதும் அவர்கள் இருவரும் விம்மி விம்மி அழத் தொடங்கினார்கள். "ஐயோ மச்சாள்... மொறிஸ் போயிட்டான்.." என்று கதறியழுதபடி ஓடிவந்து என்னைக் கட்டியணைத்தார்கள்! எனக்கு உலகமே இருண்டுகொண்டு வருவது போலிருந்தது.*

*கனவிலும் நினைத்திராத அந்தச் செய்தியை என்னால் ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை. சிங்கள இராணுவத்துக்கு மிகச்சுலபமாகப் போக்குக் காட்டியவன் என் பிள்ளை. இந்திய இராணுவத் தின் ஐந்து தடவைகளிலான பெரிய பெரிய சுற்றிவளைப்புகளில் இருந்தெல்லாம் இலாவகமாகத் தப்பிக் கொண்டவன். ஒரு தடவை இராணுவத் துப்பாக்கிக் குண்டொன்று அவனது காலைத் துளைத்த பின்னரும் துணிகரமாகத் தாக்கிவிட்டுத் தப்பி வந்தவன். அப்படிப் பட்ட என் பிள்ளை அவர்களுக்கான அந்த இலக்கை அடையும் வரை தன்னுயிர் காப்பான் என்றல்லவா நம்பியிருந்தேன்!*

*என் கனவுகள் தோற்று விட்டனவா? என் நம்பிக்கைகள் தோற்கடிக்கப் பட்டு விட்டனவா? சிந்திக்கும் திறனை நான் முற்றிலுமாய் இழந்தேன். மிக மிகக் கொடுமையானதொரு தருணம் அது!*

*அன்று மாலை சந்திரா யாழ்.கச்சேரியால் வேலை முடித்து வந்தபின் கதைத்து முடிவுசெய்த படி மறுநாள் அதிகாலை நாம் எல்லோருமாகப் பருத்தித்துறைக்குப் புறப்பட்டோம்.*

*எந்நேரமும் எதுவும் நடக்கலாமென்ற அச்சம் பருத்தித்துறைப் பகுதியெங்கும் நிறைந்திருந்தது. வீதிகள் யாவும் வெறிச்சோடிக் கிடந்தன. கடைகள் யாவும் அடைக்கப் பட்டிருந்தன. மொறிஸ் இல்லாத ஒரு நாளைக் கடப்பதற்குக் கூட பருத்தித்துறை மக்களனைவரும் அஞ்சினார்கள் என்பது தெரிந்தது. "இனி எங்களை யார் காப்பது? ஆமிக்காரர் தங்கள் எண்ணத்திற்கு வந்து எங்களையெல்லாம் சுட்டுத் தள்ளப் போகிறார்கள்.." என்றெல்லாம் பலரும் தமக்குள் புலம்பிக் கொண்டிருந்தார்கள்.*

*பருத்தித்துறை முழுவதும் கறுப்புக் கொடிகள் பறந்தன. வீதியெங்கும் தோரணங்கள். மதிற்சுவர்க ளெங்கும் அஞ்சலிச் சுவரொட்டிகள். பருத்தித்துறை மண் துயரத்தில் தோய்ந்து இருண்டு கிடந்தது!*

*"பருத்தித்துறை இராணுவ முகாமும் மந்திகை இராணுவ முகாமும் வியாபாரிமூலை இராணுவ முகாமும் இணைந்து முத்திசையில் சுற்றி வளைத்து நடாத்திய தாக்குதல் சண்டையில் மொறிஸ், தன்னோடு நின்றிருந்த எட்டுப் போராளிகளும் தப்பிப் போவதற்கான வழியைச் செய்து கொடுத்து விட்டு கடைசியாக றம்போவுடனும் சிறீயுடனும் மட்டும் நின்று இறுதிவரை போரிட்டு வீரமரண மடைந்தான்"*

*தாக்குதல் நடைபெற்ற இடங்களில் இருந்தவர்கள் ஒவ்வொருவராக எம்மைத் தேடிவந்து தமக்குத் தெரிந்த விபரங்களையெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.*

*இந்திய இராணுவம் மொறிஸின் வித்துடலை எடுத்துச் சென்று மந்திகை முகாமில் வைத்து, பாடசாலை மாணவர்களை அழைத்துச் சென்று பெருமையாகக் காட்சிப் படுத்திக் கொண்டிருக்கிறது என்ற செய்தியும் வந்து கொண்டிருந்தது.*

*மறுநாள், மந்திகை வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த மொறிஸின் வித்துடலை எடுப்ப தற்காக நானும் என் மகள் சந்திராவும், திருநாவுக் கரசு மாஸ்ரரும் சென்றோம். எம்மோடு போஸ்ற் மாஸ்ரர் மகேந்திரமும் இணைந்து கொண்டார்.*

*´இராணுவத்தினரின் அனுமதியின்றி அவனின் வித்துடலை யாரும் எடுக்க முடியாது' என்ற கடுமையான உத்தரவை இராணுவம் வைத்திய சாலைக்கு விடுத்திருந்தது.*

*'எனக்கு என் பிள்ளையின்*
*வித்துடல் வேண்டும்'*

*நான் என் பிள்ளையின் வித்துடலை எடுப் பதற்கான அனுமதியைப் பெறுவதற்காக மந்திகை இராணுவ முகாமை நோக்கிச் செல்வதற்குத் தயாரா*

னேன். என் மகள் சந்திராவோ நான் தனியாக இராணுவ முகாமிற்குப் போவதை எண்ணி மிகவும் பதற்றப் பட்டாள். இராணுவம் நிச்சயம் என்னை ஏதாவது செய்து விடும் என்று எல்லோரும் அச்சப் பட்டார்கள், தயங்கினார்கள். நான் எல்லோரையும் அமைதிப் படுத்தி விட்டு இராணுவ முகாம் நோக்கி நடக்கத் தொடங்கினேன்.

இராணுவ சென்றிப் பொயின்ற்றுகளிலிருந்து துப்பாக்கிமுனைகள் என் பக்கம் திரும்புவது எனக்கு நன்றாகத் தெரிந்தது. அடுத்து வரும் நிமிடங்களில் எதுவும் நடக்கலாமென்பதை நான் நன்கு உணர்ந்து கொண்டேன். ஆனாலும் என்னைத் தைரியமாக இயங்க வைக்கும் ஏதோ ஒரு சக்தி அப்போது என்னை ஆட்கொண்டிருந்தது. எதற்கும் முகம் கொடுக்கத் தயாராகவே நான் முகாம் நோக்கி நடந்துகொண்டிருந்தேன். அரைவாசித்தூரம் நடந்து கொண்டிருக்கும் போதே இராணுவக் கொமாண்டர் கள் முகாம் வாசலுக்கு வந்து, என் வருகையைப் பார்த்துக் கொண்டு நிற்பதைக் கண்டேன்.

வாசலை அண்மித்ததும்
"நான் மொறிஸின் அம்மா" என்றேன்.

அவ்வளவுதான். இராணுவக் கொமாண்டர் ஒருவர் அவசரமாக என் முன்னால் வந்து, என் கைகளைப் பற்றி உள்ளே அழைத்துச் சென்று என்னை ஒரு கதிரையில் அமர்த்தினார். உடனே சுடச் சுட தேநீர் தயாரித்து வந்து எனக்குப் பரிமாறினார்கள். பெரிய பதவிகளில் இருப்பவர்கள் போலத் தோன்றிய மூவர் என் முன்னால் வந்து நின்று குனிந்து என்னை வணங்கினார்கள். பிறகு என்னைப் பார்த்து,

"அம்மா... உங்கள் மகன் ஒரு பெரிய வீரன். அவனின் திறமையைக் கண்டு அவன் ஒரு வயதான பெரிய மனிதன் என்றுதான் இத்தனை நாளும் நாம் நினைத்திருந்தோம். ஆனால் அவன் வயதில்குறைந்த

ஒரு இளைஞன் என்று அறியும் போது எங்களால் நம்பவே முடியவில்லை. அவன் மிகவும் நல்லவன். அதனால்தான் அவனை எல்லா மக்களும் நேசிக்கி றார்கள் என்பது எங்களுக்குப் புரிகிறது. இத்தனை வீரமும் துணிச்சலும் மிக்க ஒருவனைப் பிள்ளை யாகப் பெற்றதற்காக நீங்கள் பெருமைப் படுங்கள். உங்களுக்கு நாங்கள் மரியாதை செய்யக் கடமைப் பட்டிருக்கிறோம். நீங்கள் ஒரு வீரத்தாய். உங்களை நாங்கள் வணங்குகிறோம்..." என்று ஆங்கிலத்தில் கூறிய படி இரு கைகளையும் குவித்து என்னை வணங்கினார்கள்.

*என்னால் அந்த நிமிடத்தை*
*நம்பவே முடியவில்லை!*

என் உடல் என்னையறியாமல் மெல்ல மெல்ல நடுங்கத் தொடங்கியது. அவ்வளவு நேரமும் எனக்குள் இறுகிப் போயிருந்த அத்தனை உணர்வு களும் பொங்கியெழுந்து என் கண்களைக் கண்ணீ ரால் மறைக்கத் தொடங்கியது! அந்தக் கணம் வரை நான் கட்டிக்காத்த என் தைரியம் அத்தனையும் ஒரு மேகம் நொருங்குவது போல் கீலம் கீலமாய் சிதறிப் போகத் தொடங்கியது!

நான் எழுந்து நின்றேன். பாதையைக் கண்ணீர் மறைத்தது. நான் அந்தக் கண்ணீரைத் துடைக்கவில்லை. அவர்களோடு சேர்ந்து என் மண்ணின் மைந்தனது வித்துடலை நோக்கி நடக்கத் தொடங்கினேன்!

# என் அன்பு மகன் சபா

*அன்று மே 6ம் திகதி, 1993ம் ஆண்டு. எனது இளையமகன் சபா (கப்டன் மயூரன்) நான் எதிர் பாராத ஒரு வேளையில் நீண்ட நாட்களின் பின் எங்கள் வீட்டுக்குவந்திருந்தான். அந்த நேரம் எனது இன்னொரு மகன் - கப்டன் மொறிஸ் மாவீரனாகி விட்டான். எனது மூத்த இரு பெண்பிள்ளைகளும் அதாவது அவனது மூத்தக்கா வதனா, இளையக்கா சந்திரா இருவரும் வெளிநாட்டுக்குச் சென்று விட்டார்கள். அவனது சின்னக்கா பிரபாவும் அவனின் கணவர் கணேசும் தங்கை பாமாவும் தான் வீட்டில் என்னுடன் இருந்தார்கள். பிரபாவுடனும் அத்தான் கணேசுடனும் பாமாவுடனும் அவன் ஒரே பகிடியும் கொண்டாட்டமும்தான். வீடு மகிழ்ச்சியில் களைகட்டியிருந்தது.*

*வயிற்றில் அல்சர் இருப்பதால் தான் வைத்தியம் செய்வதற்காக ஒன்றரை மாத லீவில் வந்திருப்பதாகச் சொன்னான். வைத்தியசாலைக்குச் சென்று ஏதோ மருந்துகள் எடுத்து வருவான். ஆனால் சாப்பாட்டில் எந்தவிதக் கட்டுப்பாட்டையும் கடைப்பிடிக்க மாட்டான்.*

*அவன் வந்திருக்கிறான் என்பதை அறிந்து அவனது பாடசாலை நண்பர்களும், போராளி நண்பர்களும் மாறி மாறி வீட்டிற்கு வந்து போய்க் கொண்டிருந்தார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் விருப்பமான உணவுகளை என்னிடம் சொல்லிச் சமைப்பித்துச் சாப்பிடுவது, ஐஸ்கிறீம் பாருக்குச் சென்று ஐஸ்கிறீம் சாப்பிடுவது, சிற்றுண்டி வகைகளைக் கொறிப்பது... தங்கையைச் சீண்டி விளையாடுவது என்று ஒன்றரை மாதமும் வீட்டில் ஒரே கும்மாளமும் கலகலப்பும்தான்.*

´என் பிள்ளை நீண்ட பொழுதுகளின் பின் என்னிடம் வந்திருக்கிறான். அவன் மனம் எந்த வகையிலும் நோகக் கூடாது. போனால் மீண்டும் எப்போது வருவானோ தெரியாது. அவர்களது முகாமிற்குள் போய் விட்டால் எல்லாம் கட்டுப்பாடு தானே` என்று நினைத்து நான் என்னால் இயன்ற வரை அவனது ஆசைகள், விருப்பங்கள் எல்லாவற் றிற்கும் ஈடு கொடுத்துக் கொண்டிருந்தேன்.

அப்போதுதான் பிரபா(அவனது சின்னக்கா) திருமணமாகி ஏழு வருடங்களின் பின் கற்பமாகி இருந்தாள். அதையிட்டு அவன் மிகுந்த சந்தோசத் துடன் இருந்தான். "மருமகனா, மருமகளா" என்று சதா ஆசையுடன் கேட்டுக் கொண்டே இருந்தான்.

இப்படியே ஆட்டமும் பாட்டமும் களிப்பும் கும்மாளமும் என்று ஒன்றரை மாதம் போன வேகமே தெரியவில்லை. என் பிள்ளை மீண்டும் என்னை விட்டுப் போகும் நாளும் வந்து விட்டது. அன்று 17.06.1993 காலையே புறப்பட வேண்டும் என்று அதற்கான ஆயத்தங்களைச் செய்யத் தொடங்கினான். பாமா அவனது உடுப்புகள் எல்லா வற்றையும் அயர்ண் பண்ணி அடுக்கிக்கொடுத்தாள். அவனது பள்ளி நண்பர்களில் மூவர் எந்நேரமும் அவனுடன்தான் நின்றார்கள். படுக்கைக்கு மட்டும் தான் தமது வீடுகளுக்குப் போய் வந்தார்கள்.

என் பிள்ளை போகப் போகிறான் என்றதும் எல்லோர் முகங்களிலும் கவலை படிந்து போனது போன்ற துயர். வீட்டில் ஒரு விதமான மௌன நிலை. ஆனாலும் அவன் வருந்தக் கூடாது என்ற நினைப்பில் சோகம் கப்பிய சிரிப்புகள். வேலைகள்.

ஆனால் அவனைக் கூட்டிச் செல்ல அன்று வாகனம் வரவில்லை. அவன் அன்று போகவில்லை என்றதும் எல்லோரிடமும் ஒரு தற்காலிகமான சந்தோசம்.

*அடுத்த நாள் 18.06.1993 காலை அவனது அத்தான் கணேஸ் சோகத்துடன் அவனிடம் விடை பெற்றுக் கொண்டு வேலைக்குச் சென்றார். திரும்பி வரும் போது அவன் அங்கு நிற்க மாட்டான் என்பது அவருக்குத் தெரியும்.*

*பிரபா(அவனது சின்னக்கா) வேலைக்குப் போகும் போது "நான் மத்தியானம் வாற பொழுது நிற்பியோ அல்லது போயிடுவியோ?" என்று கவலையோடு கேட்டாள். அவனிடமிருந்து சோகம் கலந்த சிரிப்பொன்றுதான் பதிலாகக் கிடைத்தது.*

*நான் அம்மா அல்லவா! என் சோகம் எல்லாவற்றையும் மறைத்து, செய்ய வேண்டியவை களை ஓடி ஓடிச் செய்து, அவனுக்கும் அவனது நண்பர்களுக்கும் பன்னிரண்டு மணிக்குச் சாப்பாடு பரிமாறினேன். அதன் பின் வேறு இடத்துக்கு வாகனம் வருவதாக அவனுக்குச் செய்தி வர அவன் விடைபெற்றுச் சென்றான். அவனது நண்பர்கள் அவனைக் கூட்டிச் சென்று வாகனத்தில் ஏற்றி விட்டு தமது வீடுகளுக்குச் செல்வதாகக் கூறிச் சென்றார்கள்.*

*இம்முறை என் பிள்ளையின் முகத்தில் வழமை போல இல்லாமல் ஏதோ ஒரு சோகம் அப்பியிருப்பது எனக்கு நன்றாகத் தெரிந்தது. அது ஏன் என்று புரியாமல் குழம்பினேன். ஆனாலும் எனக்குள்ளே இருந்த துயரத்தையோ, நெருடல் களையோ நான் அவனுக்குக் காட்டவில்லை.*

*அவன் நின்ற ஒன்றரை மாதமும் இராப்பகல் பாராது ஓடியோடி எல்லாம் செய்த நான், அவன் போனதும் அதற்கு மேல் எதுவும் செய்யத் தோன்றாது அப்படியே கதிரையில் அமர்ந்து விட் டேன். எல்லாம் ஒரே மலைப்பாக இருந்தது. என் பிள்ளை போய் விட்டானா..? எல்லாம் பிரமையாக இருந்தது. அப்படியே நான் பிரமை பிடித்தவள்*

போல அந்தக் கதிரையில் ஒரு மணித்தியாலம் வரை இருந்திருப்பேன்.

திடீரென்று என் பிள்ளை திரும்பி வருகிறான். ஏன்..? எனக்குச் சந்தோசமாயிருந்தது.

"என்னப்பு..! என்ன விசயம்?" கேட்டேன்.

"வாகனம் இன்னும் சொன்ன இடத்துக்கு வரேல்லை அம்மா. அதுக்கிடையிலை உங்களை ஒருக்கால் பார்த்திட்டுப் போவம் எண்டு வந்தனான். உடனை போகோணும்" என்றான். எனக்கு நெஞ்சுக்குள் என்னவோ செய்வது போலிருந்தது.

அதற்குள் அவனது சின்னக்கா பிரபாவும் வேலை முடிந்து நாலைந்து கறுத்தக் கொழும்பான் மாம்பழங்களுடன் அரக்கப் பரக்க ஓடி வந்தாள். "உனக்கு மாம்பழம் எண்டால் எவ்வளவு ஆசை எண்டு எனக்குத் தெரியும். அதுதான் வேண்டிக் கொண்டு ஓடி வந்தனானடா" என்று சொன்னாள். நான் மாம்பழத்தின் தோலைச் சீவி அவசரமாய் வெட்டிக்கொடுக்க என் பிள்ளை மிகவும் ஆசையாக ரசித்துச் சுவைத்துச் சாப்பிட்டான்.

அவன் சாப்பிட்டுக் கொண்டிருக்கவே வாகனம் எங்கள் வீட்டுக் கேற்றடிக்கு வந்து விட்டது. உடனே "பிரபாக்கா சுகத்தோடை பிள்ளையைப் பெத்தெடுங்கோ. மாமா வருவன் மருமகளைப் பார்க்க" என்று சொல்லிக் கொண்டே அவசரமாய் விடை பெற்றுச் சென்றான்.

வாகனத்தில் ஏறி, கை காட்டும் பொழுது அவன் முகத்தில் சோகம் அப்பியிருந்தது. என் கண்கள் குளமாகி விட்டன. என் கண்களில் நீர் வழிவதைக் கண்டால், அவன் கலங்குவானே! என்பதால் என் கண்களைத் துடைக்காமலே திரையிட்ட கண்ணீரோடு கை காட்டினேன்.

*எனக்கு அப்போது தெரியாது 'அன்று அப்போதுதான் என் பிள்ளையைக் கடைசியாகப் பார்க்கிறேன்' என்பது.*

*பிரபாவின் குழந்தையைப் பார்க்க மிகவும் ஆசைப் பட்டான். கடற்புலி கேணல் தளபதி பாமா வந்து குழந்தையைப் பார்த்த போது சொன்னாள். "மயூரன் மணலாறு இதயபூமிச் சண்டைக்குப் போய் வெற்றியோடு திரும்பியிருக்கிறார். மருமகளைப் பார்க்கக் கட்டாயம் வருவார்" என்று.*

*வருவான் வருவான் என்றுதான் காத்திருந் தோம். கடைசி வரைக்கும் அவன் வரவேயில்லை. பின்னர் 'விடுதலைப் புலிகளின் பூநகரிப் பெருஞ் சமருக்கு (தவளைப் பாய்ச்சல்) என் மகனும் தனது சைவர் படையணியுடன் சென்றுவிட்டான்' என்ற செய்தி கிடைத்தது.*

*பூநகரிப் பெருஞ்சமரில் களத்தில் நின்றிருந்த எங்கள் பெடியளெல்லாம் வெற்றிபெற்றுத் திரும்பி வருவார்கள் என்ற கனவோடு காத்திருந்தேன். என் மகன் சபாவும்(கப்டன் மயூரன்) வெற்றிக்களிப்புடன் என்னிடம் திரும்பி வருவான் என்று வழிமேல் விழி வைத்துப் பார்த்திருந்தேன்.*

*11.11.1993 அன்று நடைபெற்ற பூநகரிப் பெருஞ்சமரில் (தவளைப்பாய்ச்சல்) முதல் நாள், முதல் அணியாகச் சென்று எங்கள் விடுதலைக்காய் போராடி வீரமரணமடைந்தான் என் மகன் என்ற செய்தியே என்னைத் தேடி வந்தது.*

*விடுதலையே மூச்சாகி, வீரமே விளக்காகி, பொருது நின்ற படையினருள் புயலாகிப் போனான் என் மகன்! விழுப்புண் பெற்ற அவன் வித்துடலைக் கூடக் காண வழியின்றிக் கலங்கி நின்றேன் நான்!*

*அதன் பின் தான் உணர்ந்தேன் அப் பெரிய*

*சமருக்குப் போவதற்காகவே என் அன்பு மகன் சபா நீண்டதொரு விடுமுறையில் என்னிடம் வந்து நின்றான் என்பதை.*

*நீங்காத நினைவுகளை மட்டும் என் நெஞ்சோடு விட்டு விட்டு என் பிள்ளை சென்று விட்டான்.*

*-11.11.2000*

## *தென்பாண்டிச் சீமையிலே தேரோடும் வீதியிலே மான் போல வந்தவரை யார் அடித்தாரோ!*

***மாவீரன் லெப்டினன்ட் வெங்கடேஸ் (சண்முகசுந்தரம் ஜீவகரன்) நினைவாக..***

*வெங்கடேஸ், எனது மகன் மொறிஸின் அருமைத் தோழன். கடற்புலி மேஜர் பாமாவின் அண்ணன். எனக்கு அவன் அன்பு மகன்.*

*அவன் எங்கள் வீட்டுக்கு வரும்போதெல்லாம் "பசிக்குதணை. கெதியாச் சமையுங்கோணை" என்று உரிமையோடு என்னிடம் சொல்லுவான். சமைத்ததும் சாப்பிடுவான். நான் அவனுக்காகவும் அவன் போன்ற மற்றைய போராளிப் பிள்ளைகளுக் காகவும் கடலை, பருப்பு, முறுக்கு... என்று எல்லாம் அவித்தும் சுட்டும் பொரித்தும் வைத்திருப்பேன். அவன் வரும் போதெல்லாம் அவைகளை மிகவும் விரும்பி ரசித்து, ருசித்துச் சாப்பிடுவான். தன் வீடு போலவே என் வீட்டில் நடந்து கொள்வான்.*

*எனது மூக்குக் கண்ணாடியை நான் கழற்றி வைத்தால் போதும், எடுத்துப் போட்டுக் கொண்டு அயர்ண்பண்ணி வைத்திருக்கும் Shirt களில், காசை பொக்கற்றினுள் வைத்தால் வடிவாக வெளியில் தெரியக் கூடிய வகையிலான ஏதாவது ஒரு மெல்லிய சேர்ட்டையும் தெரிவு செய்து எடுத்துப் போட்டுக்கொண்டு, என்னிடம் தாள்க்காசு தரும்படி கேட்டு வாங்கி, அதைப் பொக்கற்றுக்குள் வைத்து விட்டு மொறிஸின் இளையக்கா சந்திராவிடம் "இளையக்கா, இப்ப என்னைப் பார்க்க அறிவாளி*

*மாதிரி இருக்குதோ?" என்று கேட்பான்.*

*அனேகமான சமயங்களில் "தென்பாண்டிச் சீமையிலே தேரோடும் வீதியிலே மான் போல வந்தவரை யார் அடித்தாரோ..." என்ற பாடல் கசற்றைப் போட்டு விட்டு, றேடியோவுக்கு முன்னால் அமர்ந்து, மேசையில் தன் தலையைச் சாய்த்து வைத்துக் கொண்டு, பாடலைக் கேட்டபடி அழுது கொண்டிருப்பான். அவன் கண்களில் இருந்து கண்ணீர் ஓடிக் கொண்டே இருக்கும். நான் பல தடவைகள் அதைப் பார்த்து "ஏன் அப்பு அழுகிறாய்?" என்று கேட்டிருக்கிறேன். ஆனால் அவன் ஒரு நாளும் அந்தப் பாடலுக்கும் அவனுக்கும் இடையிலான துயரத்தைப் பற்றி எனக்கு எதுவுமே சொன்னதில்லை.*

*அன்றும், அதாவது 1988ம் ஆண்டு, மே மாதம், 10ந் திகதி எங்கள் வீட்டுக்கு வந்தவன் அந்தப் பாட்டுக் கசற்றைப் போட்டுக் கேட்டு அழுது கொண்டிருந்தான். "அப்பு ஏனடா அழுகிறாய்? சோல்லனடா" என்றேன். அவன் கண்களைத் துடைத்துக் கொண்டு "ஒண்டுமில்லை அம்மா. ஒரு நல்ல ரீ (தேநீர்) உங்கடை கையாலை போட்டுத் தாங்கோ" என்றான்.*

*"இரு அப்பு. உடனை போட்டுக் கொண்டு வாறன்" சொல்லி விட்டு அடுக்களையை நோக்கி விரைந்தேன். அந்த நேரம் எனது மகன் மொறிஸ் அவசரமாய் வீட்டுக்குள் ஓடி வந்தான். வந்ததும் வராததுமாய் "வெங்கடேஷ், வெளிக்கிடு கெதியாய். கூட ரவாஸ் வருவான். அவனையும் கூட்டிக் கொண்டு போ" சொல்லிக் கொண்டு ஒரு பையில் ஏதோ பொருட்களைப் போட்டு வெங்கடேஷிடம் கொடுத்தான்.*

*"அம்மா ரீ (தேநீர்) கொண்டு வருவா. குடிச் சிட்டுப் போறன்" என்று வெங்கடேஷ் சொல்வது*

என் காதுகளில் விழுந்தது. நான் அவசரமாய் தேநீரைத் தயாரிக்கத் தொடங்கினேன். ரவாஸ் மிக்ஸரைக் கொறித்துக் கொண்டிருந்தான்.

"போதுமடா எழும்படா"
மொறிஸின் அதட்டலும் எனக்குக் கேட்டது.

நான் இருவருக்கும் அவசரமாய் கோப்பை களில் தேநீரை ஊற்றிக் கொண்டு ஓடி வந்தேன். அவர்கள் இருவரும் எனது வீட்டின் கிழக்குப் பக்கக் கதவால் வெளியில் இறங்கிக் கொண்டிருந்தார்கள்.

"அவங்கள் 'ரீ'யைக் குடிச்சிட்டுப் போகட்டு மன்" என்றேன்.

"சும்மா இருங்கோ அம்மா. அவங்களுக்கு இப்ப நேரமில்லை. இரவு வருவாங்கள். உங்கடை ஆசைக்கெல்லாம் குடுங்கோ" என்றான் மொறிஸ். நான் கலக்கத்தோடு வாயடைத்துப் போய் நின்றேன். அவர்கள் "அம்மா போட்டு வாறம். மொறிஸ் சரிதானே..." என்ற படி பின் கேற்றைத் திறந்து கொண்டு வெளியேறினார்கள்.

அவர்கள் போய் கொஞ்ச நேரம் தான் ஆகியிருக்கும். பயங்கரமான வேட்டுச் சத்தங்கள் கேட்டன. நாமெல்லோரும் கதி கலங்கி விட்டோம்.

மொறிஸின் முகத்தைப் பார்க்க முடியவில்லை. அவன் எங்கோ வெளியில் ஓடினான். நாம் அதாவது நானும் எனது பெண்பிள்ளைகள் சந்திரா, பிரபா, பாமா மூவரும் செயலிழந்து தவியாய்த் தவித்தபடி துடித்துக் கொண்டு நின்றோம். இரவு எட்டு மணியளவில் தீராத சோகத்துடன் மொறிஸ் வீடு வந்து சேர்ந்தான்.

"என்னடா, என்ன நடந்தது?" நான் தான் கேட்டேன்.

*அவன் குமுறிக் கொண்டு "வெங்கடேஷ் போயிட்டான் அம்மா" என்றான். தொடர்ந்து "அம்மா... ரவாசும்தான் போயிட்டான்" என்று சொல்லித் தேம்பினான். எனது தலையில் யாரோ சம்மட்டியால் அடித்தது போல இருந்தது.*

*வெங்கடேஷ் கொண்டு சென்றது முக்கிய மானவர்களிடம் ஒப்படைக்க வேண்டிய சில மிக முக்கியமான விடயங்கள் என்பதுவும் இந்தியன் ஆமியின் துரத்தலால் ரவாஸ் குண்டடி பட்டு வீழ்ந்ததும் வெங்கடேஷ் ஓடி ஓடி இயலாத நிலையில் ஒரு வீட்டில் புகுந்து தனக்குத் தானே காதுக்குள் வெடி வைத்து மரணித்த கொடிய உண்மையும் பின்புதான் எமக்குத் தெரிய வந்தன.*

*அழுதோம். கதறினோம். அவர்கள் வித்துடல் கள் கூட எங்களுக்குக் கிடைக்கவில்லை.*

*அவன் அன்றும் என்றும் இன்றும் ஏன் அந்தப்பாட்டுக்கு அழுதான் என்பதற்கான விடையும் எனக்குக் கிடைக்கவேயில்லை. கூறாமலே அவன் போய் விட்டான்.*

*"ஒரு நல்ல 'ரீ' உங்கடை கையாலை போட்டுத் தாங்கோ" என்று கேட்டவன், அன்று எனது 'ரீ' யைக் கூடக் குடிக்காமல் போய் விட்டான்.*

*படம் போல இன்னும் மனதுள் பதிந்து போயிருக்கும் காட்சிகளை நினைந்து நினைந்து கலங்குகிறேன். தென்பாண்டிச் சீமையிலே... என்ற பாடலைக் கேட்கும் போதெல்லாம் என் நெஞ்சு குலுங்கி அதிர்வுறும். என் பிள்ளை வெங்கடேஷின் நினைவு என்னை அலைக்கழிக்கும்.*

*-23.10.2008*

# முன்னம் வந்துதித்த மூத்த செல்வம் அவன்!

*வன்னியிலே கவி படித்த வானம்பாடி,*
*வற்றாது சுரந்து நின்ற தமிழின் ஊற்று!*

*குடும்பத்தின் முதல் செல்வம் அவன்! வளம் கொழிக்கும் வடமராட்சி மண்ணின் பருத்தித்துறை நகரில் இருக்கும் அழகிய ஊரான ஆத்தியடியில் 30.01.1958 அன்று எங்களுக்கு முதல் முத்தாக வந்ததுதித்தவன். அவனுக்கு பிறேமராஜன் என்று ஆசையாகப் பெயர் சூட்டி, சீராட்டிப் பாராட்டி எத்தனை கனவுகளுடன் வளர்த்தோம். எங்களதும் உறவுகளினதும் பாசமும் நேசமும் சேர, அவன் ஒரு ராஜகுமாரனைப் போல் அத்தனை வசதிகளோடும் வளங்களோடும் வளர்ந்தான்.*

*அவனை ராஜன் என்றுதான் அழைப்போம். ராஜன் எல்லோருக்கும் செல்லப்பிள்ளை. தீராத விளையாட்டுப்பிள்ளை. பாட்டா, பெத்தம்மா, சித்தி மாமாமார், மாமிமார், சித்தப்பாமார்... என்று அவனைக் கொஞ்சி விளையாட ஏராளம் உறவுகள். அதனால் அளவுக்கு மீறிய செல்லமும் துடுக்கும். ஒரு இடத்தில் ஒரு நிமிடம் இருக்க மாட்டான். எங்கள் பென்னாம் பெரிய வீட்டில், பெரிய விறாந்தை முழுவதும் ஓடிக் கொண்டே திரிவான்.*

*குடும்பத்தில் ஏழு பேருக்கு அண்ணன் அவன். குறும்பிலும் மன்னன். நண்பர்கள் மத்தியில் மிகுந்த கலகலப்பானவன், சுற்றியிருக்கும் எல்லோரையும் குதூகலிக்க வைப்பவன். படிப்பிலும் அவன் வலு விண்ணன். சின்ன வயதிலேயே கல்வியிலும் கலை*

*களிலும் பேச்சுவன்மையிலும் விளையாட்டுகளிலும் சிறந்து விளங்கியவன். பன்னிரண்டு வயதிலேயே தன் முதற் கவிதையை எழுதி பாடசாலையில் ஆசிரியர்களின் பாராட்டுக்களையும் பெற்றவன்.*

*அவன் தனது ஆரம்பக்கல்வியை வடமராட்சி இந்து மகளிர்கல்லூரியிலும் உயர்கல்வியை பருத்தித் துறை ஹாட்லிக் கல்லூரியிலும் திறமையாகக் கற்றுத் தேர்ந்தான். தமிழறிவில் மிகவும் சிறந்து விளங்கினான். அது போலவே ஆங்கிலத்தையும் சிங்களத்தையும் கற்று, அவற்றிலும் மிகவும் புலமை பெற்றவனாக, சரளமாகப் பேசக் கூடிய திறமை பெற்றவனாக இருந்தான். க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் ஏழு பாடங்களுக்கு 'டிஸ்ரிங்சன்' எடுத்து பாடசாலைக்குப் பெருமை சேர்த்தான். பாடசாலைக் கல்வி முடிந்ததும் கொழும்பில் தொழிற்பயிற்சிக் கல்வியினை மேற்கொண்டு, அதனைத் தொடர்ந்து இலங்கை மதவாச்சியில் இயந்திரத்துறையில் தொழில்நுட்பவியலாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்தான்.*

*திடீரென்று என்ன நினைத்தானோ தெரிய வில்லை, எல்லாவற்றையும் விட்டுவிட்டு 1982இல் சிங்கப்பூருக்குப் பயணமாகி விட்டான். அங்கும் ஒரு மாதம்தான். சிங்கப்பூர் அவனுக்குப் பிடிக்கவில்லை. தாயகத்திற்கே திரும்பி விட்டான். மீண்டும் தொழில் நுட்பவியலாளராகப் பணியாற்றுவதில் அவனுக்கு ஆர்வம் இருக்கவில்லை. அதை விடுத்து தனக்குப் பிடித்தமான ஆங்கில ஆசிரியருக்கான சிறப்புப் பயிற்சிக் கல்வியை பேராதனை பயிற்சிக் கல்லூரி யில் இணைந்து கற்கத் தொடங்கினான்.*

*1983 யூலையில் நாடு முழுவதும் கலவரம். கொழும்பில் அந்தக் கலவரத்தில் அகப்பட்டவன் அருந்தப்பில் உயிர் தப்பி ஊர் வந்து சேர்ந்தான்.*

*அதே ஆண்டு வற்றாப்பளையைப் பிறப்பிட*

மாகக் கொண்ட மஞ்சுளாவை காதலித்து, திருமணம் செய்து, வளங்கொழிக்கும் வற்றாப்பளையில் தன் இல்லற வாழ்க்கையை இனிதே தொடங்கினான்.

இல்லற வாழ்வோடு ஆசிரியக்கல்வியையும் சிறப்பாகக் கற்று, பரீட்சையில் அதிகூடிய புள்ளி களைப் பெற்று ஆங்கில ஆசிரியராக நியமனம் பெற்றான். தமிழிலும் ஆங்கிலத்திலும் அவனுக்கிருந்த புலமையும் இயல்பாகவே அவனுக்குள் இருந்த கற்பிக்கும் திறமையும் சேர்ந்து ஆசிரியப் பணிக்கு மிகவும் பொருத்தமானவனாக மிகுந்த சிறப்போடு ஆத்மார்த்தமாகச் செயற்பட்டான். மாணவர்களுக்கு ஆங்கிலக் கல்வியை ஊட்டி தனது ஆற்றல்களை அவர்கள் மூலம் வெளிக்கொணர்ந்தான். பாடசாலை விழாக்களிலும் விளையாட்டுப் போட்டிகளிலும் தானே ஆங்கில அறிவிப்பாளராக நின்று தன் குரல் வளத்தால் எல்லோரையும் கவர்ந்தான். பாடசாலை நாடகப் போட்டிகளுக்கு பிள்ளைகளைத் தயார் படுத்திப் பயிற்றுவித்து முதலிடம் பெறவைத்து பாட சாலைக்கே பெருமை சேர்த்துக் கொண்டிருந்தான்.

இந்தக் காலகட்டத்தில்தான் ஈழத்தில் போர் மேகம் சூழத் தொடங்கியது. முதலில் சிங்கள இராணுவம், தொடர்ந்து இந்திய இராணுவம் என்று மக்களைப் படாதபாடுபடுத்திக் கொண்டிருந்தார்கள்.

நாட்டு நிலவரம் மிகவும் மோசமாகப் போய்க் கொண்டிருந்தது. தாய்மண்ணின் மீது உயிரையே வைத்திருக்கும் குடும்பம் எங்கள் குடும்பம். அவனின் தம்பிமார் இருவர்(மொறிஸ்,மயூரன்) தாய்மண்ணின் மீட்பிற்காக ஈழவிடுதலைப்போராட்டத்துக்கு தம்மை அர்ப்பணித்துக் கொண்டார்கள்.

1989 மே மாதம் 1ம் திகதி அவனின் தம்பி மொறிஸ் இந்திய இராணுவத்துடன் போரிட்டு வீரமரணமடைந்த போது எங்கள் எல்லோரையும் போலவே அவனும் முழுவதுமாய் மனமுடைந்து

*போயிருந்தான். தனியாகத் தன் குடும்பத்துடன் வற்றாப்பளையில் வாழ்ந்து கொண்டிருந்த அவன் சரியாகத் தன்பணியை மேற்கொள்ள முடியாமல் மனதளவில் பெரிதும் பாதிக்கப் பட்டிருந்தான்.*

*ஏற்கெனவே கவிதை மனம் கொண்டவன் அவன். கவிதைகளை எழுதிக் குவித்து தன் மனதை அதன் மூலமாய் ஆற்றத் தொடங்கினான்.*

*1990ம் ஆண்டு டிசம்பர் 30ந் திகதி. அந்த நாள் விடிந்தே இருக்கக் கூடாது. அது ஒரு சபிக்கப் பட்ட நாள். அன்றுதான் அவனது வாழ்வு தலை கீழாக மாறிப் போனது. பாடசாலை ஆசிரியர்களுக் கான மாதாந்தக் கொடுப்பனவுகள் வந்து சேராத தால் அதை எடுத்து வர என்று தாண்டிக்குளம் தாண்டி கொழும்புக்குப் பயணமானவன் திரும்பி வரும் போது தாண்டிக்குளத்தருகில் நடைபெற்ற இராணுவத்தாக்குதலில் இடது கால் தொடையோடு அறுந்துபோக, இடதுகை சிதைந்து தொங்க, வலது காற்பெருவிரல் துண்டமாக உடல் சிதைந்து மனம் சிதைந்து யாழ்ப்பாண வைத்தியசாலைக்கு வந்து சேர்ந்தான்!*

*இந்த அவலங்கள் எதுவும் தெரியாத நானும் எனது கணவரும் அவன் யாழ். வைத்தியசாலையில் இருக்கிறான் என்பதை மட்டும் கேள்விப்பட்டு அவசரமாக வைத்தியசாலையை நோக்கி ஓடினோம். அங்கே அவன் இருந்த கோலத்தைப் பார்த்ததும் நெஞ்சே வெடித்து விடும் போலிருந்தது. ஆஜான பாகுவான தோற்றம்கொண்ட என்பிள்ளை, எங்கள் குடும்பத்தின் மூத்த முத்து முடமாகிச் சாய்ந்திருந் தான். இராஜ நடை போட்ட அவனது கால்களில் ஒன்றைக் காணவில்லை. தொடையடியில் பந்தம் போலச் சுற்றிக் கட்டப் பட்டிருந்தது. வலதுகை முழங்கையடியில் சிதைந்திருந்தது. தூக்கிக் கட்டி விட்டிருந்தார்கள். வலதுகால் பெருவிரல் இல்லாமல் மூளியாக இருந்தது. மிகமிகக் கொடுமை அது.*

*என்னால் என் துயரத்தைக்கட்டுப்படுத்தவோ என்னைத் தேற்றிக் கொள்ளவோ முடியாதிருந்தது. வேதனை தாளாது மனதுக்குள் தேம்பியழுதேன். வெளியில் நான் அழுதால் அவனும் தன்னைத் தேற்றிக்கொள்ள முடியாமல் துடிப்பானே!*

*என் மகனின் உள்ளத்தை ஆற்றுப் படுத்த என்னை நான் உள்ளுக்குள் இறுக்கிக் கட்டி வைத்துக் கொண்டேன்.*

*சில நாட்களில் அவனை வைத்தியசாலை யில் இருந்து வீட்டுக்குக் கொண்டு வர அநுமதி தந்தார்கள். கொண்டு வந்து நானே பராமரித்தேன். இடையிடையே வற்றாப்பளையில் இருந்து அவனின் மனைவி மஞ்சுளா வருவா. ஒரு வாரம் அல்லது இரு வாரங்கள் தங்கி நிற்பா. பிள்ளைகள் அங்கே தனியே என்பதால் போய் விடுவா. என் மகனுக்கு அது பெருந்தனிமை. அதனால் அவனை வற்றாப்பளைக்கே அழைத்துச் சென்று அங்கிருந்து சில காலம் பராமரித்தேன். பின்னர் ஊருக்கும் வற்றாப்பளைக்குமாக நான் அலைந்து கொண்டிருந் தேன். வெந்துயரில் மாய்ந்து கொண்டிருந்த என் மகனுக்கு என்னால் செய்யக் கூடிய உதவி அது ஒன்றுதான்.*

*இந்த நேரத்தில்தான் 'பிறேமராஜன்' என்றும் 'பிறேம் மாஸ்டர்' என்றும் எல்லோராலும் அறியப் பட்ட என் மகன் 'கவிஞர் தீட்சண்யன்' ஆனான். அவனது கவிதையாற்றல் அளவிட முடியாதது. அவனுக்கு இருந்தால் நின்றால் பார்த்தால் கேட்டால்.. என்று எப்பொழுதிலும் கவிதை வரும். அவன் மரபுக் கவிதைகள், புதுக் கவிதைகள், கவியரங்கக் கவிதைகள், வானொலிக் கவிதைகள், சஞ்சிகைகளுக்கான கவிதைகள் என்று பலதரப் பட்ட கவிதைகளையும் எழுதிக் குவித்தான். அவனது கவிதைகள் தனித்துவமானவை என அவனது நண்பர்களும் மற்றவர்களும் பாராட்டினார்*

கள். புகழ்ந்தார்கள். அவனது உணர்ச்சி மிக்க கருத்தாழமான விடுதலைப் போராட்டக்கவிதைகள் புலிகளின்குரல் வானொலியில் ஒலித்தன. கவியரங் கங்களில் முழங்கின.

எதற்காகவும் காலங்களும் நேரங்களும் காத் திருப்பதில்லைத்தானே! அவை தம்பாட்டில் ஓடிக் கொண்டே இருந்தன. மகன் தனது குடும்பத்துடன் வற்றாப்பளையிலும் நானும் கணவரும் வவுனியா விலும் இருந்தோம். வெளிநாட்டில் இருக்கும் எனது மற்றையபிள்ளைகள் என்னையும் எனது கணவரை யும் அங்கு வந்து சற்றே நிம்மதியாக ஆறுதலாக இருக்கும் படி அழைத்துக் கொண்டேயிருந்தார்கள்.

அந்த விடயங்கள் சரிவருவதற்கு முன் எனது கணவரும் நோய்வாய்ப்பட்டு என்னை மட்டுமல்ல. இந்த உலகையும் விட்டுப் போய் விட்டார். அவர் இறந்த நேரம் ஊரெல்லாம் இராணுவ ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருந்தது. வற்றாப்பளைக்கும் வவுனியாவுக்கும் இடையில் உக்கிரமான போர் நடந்து கொண்டிருந்தது. எங்களுக்கும் மகனுக்கும் இடையில் பாலமாய் சில விடுதலைப் புலிப் போராளிகள்தான் இருந்தார்கள். அவர்கள் மூலந் தான் நாங்கள் கடிதங்களையும் தேவையான செய்திகளையும் பரிமாறிக் கொண்டிருந்தோம். எனது கணவர் இறந்தசெய்தி அவரின் சிதையேறிய பின்பே என் மகனுக்குக் கிடைத்தது. அப்பாவின் மரணச்சடங்கிற்குக் கூட வர முடியாமல் போய் விட்டதே என்று அவன் மனம் மிக நொந்து எழுதிய

வெந்துயரால் வாடுகிறேன் அம்மா!
முந்தியெனைப் பெற்றெடுத்து
மூத்த திரு மகவென்று
தந்தி கண்டு வந்து பார்த்த அப்பா,
பிந்தி வந்த நாட்களிலே - எனைப்
பித்தனைப் போலாக்கி விட்டு- உங்கு
கண்ட துயரனைத்தும் நான் அறிவேன்.

*என் செய்ய?!*
*கொள்ளிக்கும் கொடுப்பனவு இல்லாமற்*
*போய் விட்ட*
*´ஷெல்´ லின் பாற்பட்ட*
*வெறும் ஊனனாகி விட்டேனே!*
*எண்ணிட முகம் விறைக்கும்*
*இம்சைக்குள்ளானேனே!*
*சொல்லிட முடியாத சோகமம்மா...*

*என்ற வரிகள் என் கரம் கிட்டிய போது அவன் துயர்கண்டு ஆற்றாமையில் துடித்தேன். தவித்தேன். மனம் நொந்து வெந்தேன்.*

*என் மற்றைய பிள்ளைகளின் முயற்சியால் நான் ஜெர்மனிக்கு வந்து விட்டேன். என் உடல் தான் இங்கு வந்ததே தவிர என் உயிர் என் மண்ணிலேயே தங்கி விட்டது! என் அன்பு மகன், என் மூத்த முத்து எத்தனை பேரோடும் புகழோடும் வாழ்ந்தான்! ஆஜானபாகுவான தோற்றத்துடன் ஏறு நடை போட்ட என் பிள்ளை இப்படி ஊன்றுகோல் கொண்டு நடக்கும் ஊனனாகி, மனவுளைச்சலோடு வாழ்ந்து கொண்டிருக்கையில் அவனை விட்டு வர மனமில்லாமல்தான் நான் ஜெர்மனிக்கு வந்து சேர்ந்தேன். நானில்லாத அந்தக் காலம் அவனுக்கு மிகவும் துயர் நிறைந்த மகிழ்ச்சியற்ற காலமாக இருந்ததை நானறிவேன். என்னைக் காண முடியா மல் அவன் கலங்கியழுததை நானறிவேன். நான் அருகிலில்லாத ஒரு வாழ்வை அவன் வெறுத்ததை நானறிவேன். இருந்தாலும் என் செய்வேன்?!*

*காலம் என்னை இப்படித்தான் கொண்டு வந்து நிறுத்தி வைத்திருக்கிறது! 2000ம் ஆண்டு, மே மாதம் 13ம் திகதி ´என் பிள்ளை இந்த உலகை விட்டுப் போய் விட்டான்‘ என்ற செய்தி என்னை வந்தடைந்தது. அவன் இழக்கக் கூடாததையெல்லாம் இழந்தும் இயன்றவரை தன் மண்ணுக்காய் பெரும் பணி செய்து வாழ்ந்தான்.*

*அவன் விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவில் பொட்டம்மான் அவர்களிடம் முக்கிய மொழிபெயர்ப்பாளராகப் பணியாற்றினான். அது அவனுக்கு பெரும் ஆத்மதிருப்தியைத் கொடுக்கும் பணியாக அமைந்திருந்தது. அவனால் போராட்டம், புலனாய்வு, போரியல், அரசியல், அறிவியல் சார்ந்த ஆங்கில நூல்கள் பல தமிழுக்கு மொழிபெயர்க்கப் பட்டு புத்தகவடிவில் ஆவணப்படுத்தப் பட்டன. கூடவே பல ஆங்கிலத் திரைப்படங்களும் தமிழ் மொழிபெயர்ப்போடு வெளிவருவதற்கு அவனது பணிகள் வெகு காத்திரமாக அமைந்திருந்தன.*

*அவன் விடுதலைப் போராட்ட வாழ்வில் தன்னை அர்ப்பணித்து தன்னாலியன்ற அனைத்தும் செய்து கடைசிவரை ஒரு கண்ணியமான தன்மான முள்ள வீரத் தமிழ் மகனாக வாழ்ந்தான். அதுவே கடைசி மூச்சிருக்கும் வரை அவனுக்கு ஆறுதலளித்த ஒரேயொரு விடயமாகவும் இருந்திருக்கும்!*

*என் மகனின் கனிவான அன்பு முகமும் மனதை வருடும் புன்னகையும் இனிய பேச்சும்.. என்றும் என்னுள் உயிர்ப்போடு வாழ்ந்துகொண்டே இருக்கும்! அவையே என்னை வாழ வைத்துக் கொண்டும் இருக்கும்!*

# *அப்பா (என் அன்புக் கணவர்)*

*நான் இன்று ஜெர்மனியில், மன்கைம் என்னும் நகரில் வசித்துக் கொண்டிருக்கிறேன். 1998ம் ஆண்டு, ஏப்ரல் மாதம் இங்கு வந்து சேர்ந்தேன். எனக்கு அகதி அந்தஸ்து கிடைத்து, தனி வீடும், சலுகைகளும் கிடைத்து வசதியாகத்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.*

*எனது பொழுதுகள் வாசிப்பது, வானொலி கேட்பது, தொலைக்காட்சி பார்ப்பது, மற்றும் பேரப் பிள்ளைகளுடன் கதைப்பது, விளையாடுவது என்று சந்தோசமாகத்தான் போகிறது. இருந்தாலும் எனக்குள் இருக்கும் அழியாத நினைவுகள் என்னை அடிக்கடி வாட்டி எடுக்கும்.*

*1994இல் எனது அன்புக் கணவரோடுதான் எங்கள் ஊரை விட்டு வெளிக்கிட்டு கொழும்புக்குச் சென்றேன். கொழும்பு வாழ்க்கை எங்களுக்குப் பிடிக்கவில்லை. அதனால் அங்கிருந்து திரும்பி வவுனியாவுக்குச் சென்றோம்.*

*கடைசியில், வவுனியாவில் 1997ம் ஆண்டு டிசம்பர், 1ம் திகதி எனது அன்புக் கணவரையும், பறிகொடுத்து விட்டுத்தான், எனது பிள்ளைகளின் வற்புறுத்தல்களாலும் முயற்சிகளாலும் ஜேர்மனிக்கு வந்து சேர்ந்தேன்.*

*எமது சொந்தவூர் பருத்தித்துறையில் உள்ள ஆத்தியடி. அங்கு மாளிகை போன்றதொரு பெரிய வீட்டில் நானும் எனது கணவரும் எமது எட்டுப் பிள்ளைகளும் சந்தோசமாக வாழ்ந்து வந்தோம். அந்த வீடு அன்பும் பாசமும் கலகலப்பும் சந்தோசமும் நிறைந்ததொரு கூடு.*

எனது கணவர் ஒரு புகையிரதநிலைய அதிபர். அவர் இலங்கையின் எல்லாப் பாகங்களி லும் வேலை செய்தவர். எங்கு வேலை செய்து கொண்டிருந்தாலும் என்னையும் பிள்ளைகளையும் பார்க்க என்று அடிக்கடி ஓடி வருவார். வரும் போது அந்தந்த இடங்களில் உள்ள, வாங்கக்கூடிய வீட்டுக்குத் தேவையான பொருட்கள், பிள்ளை களுக்கு விருப்பமான பழங்கள், சொக்கிளேற்ஸ் தேங்காய்ப்பூரான்.. அவரவர் வயதுக்கேற்ப கதைப் புத்தகங்கள், பத்திரிகைகள்.. என்று நிறையவே வாங்கி அள்ளிக் கட்டிக்கொண்டு வருவார். அவர் வீட்டுக்கு வந்து விட்டால் வீடு திருவிழாக்கோலம் பூண்டுவிடும். பிள்ளைகள் எல்லோரும் ஆரவாரமும் சந்தோசமும் சிரிப்பும் கும்மாளமுமாகத் திரிவார்கள். அவர் எங்களிடம் அவ்வளவு அன்பைக் கொட்டி, ஆதரவோடு நடந்து கொள்வார். என்னையோ பிள்ளைகளையோ விட்டு எங்கேயும் செல்ல மாட்டார். சமையலில் இருந்து துணி துவைப்பது வரை வீட்டின் எல்லா வேலைகளிலும் தானும் பங்கெடுத்து மிகவும் ஒத்தாசையாக இருப்பார். எதைச் சமைத்துக்கொடுத்தாலும் மிக ரசித்து "சிவா, நல்ல ருசியா இருக்கு" என்று சொல்லிச் சொல்லிச் சாப்பிடுவார். அவர் எனக்கொரு அன்பான கணவர். என்பிள்ளைகளுக்கோ பாசம்நிறைந்ததொரு அப்பா.

பிள்ளைகள் தங்களுக்கு விருப்பமானதை யெல்லாம் அவரிடம் கேட்பார்கள். அவரும் தன் னால் இயன்றதையெல்லாம் செய்வார். கடற்கரை, கோவில் திருவிழாக்கள், திரைப்படங்கள், பாட்டுக் கச்சேரிகள்.. என்று பிள்ளைகளைக் கூட்டிப் போய் காண்பித்து, ஆசைப்பட்டதை வாங்கிக் கொடுத்து, அன்பாக, ஆசையாக, தோழமையோடு செயற் படுவார். பிள்ளைகளுடன் சேர்ந்து தானும் ஒரு பிள்ளையாக ஓடிப்பிடித்தல், ஒளித்துப்பிடித்தல், குழைபோடுதல், டோங்கடித்தல், கிட்டியும் புள்ளும், வாலாக்கொடி ஏற்றுதல், பட்டம் விடுதல், லூடோ, சம்பா... என்று எல்லா விதமான விளையாட்டுக்

*களையும் விளையாடுவார். பிள்ளைகளை மடியில் வைத்துக் கதைகள் சொல்வார். கதைப்புத்தகங்களை அபிநயங்களுடன் வாசித்துக் காட்டுவார்.*

*அவர் அப்படி வந்து நிற்கும் அந்த நாட்களில் பிள்ளைகள் பாடசாலைக்குப் போகவே மனமின்றித் தயங்குவார்கள். ஆனால் அதற்கு அவர் ஒரு நாளும் இடம் கொடுக்க மாட்டார். படிப்பு அவருக்கு முக்கியம். கூடவே, ஒழுக்கம், கட்டுப்பாடு, நேர்மை என்பவைகளின் முக்கியத்துவத்தையும் பிள்ளை களுக்கு அன்போடு உணர்த்தி அவர்களின் மனம் நோகாமல் செயற் படுவார். பாடசாலை விடுமுறை வந்து விட்டால் போதும். பிள்ளைகளை தான் வேலை செய்யும் இடங்களுக்கெல்லாம் அழைத்துச் சென்று, எல்லாவற்றையும் காட்டி, ஆசைப்பட்ட வைகளை வாங்கிக் கொடுத்து அவர்களை மிகுந்த மகிழ்ச்சியோடு வைத்திருப்பார். மிக இனிமையான அனுபவங்கள் அவை.*

*அவர் என்னையும் பிள்ளைகளையும் அன்பா கவும் சந்தோசமாகவும் வைத்திருப்பதோடு தானும் எம்மோடு சந்தோசமாக இருப்பதையே எப்போதும் விரும்புவார். ஒருபோதும் அவர் என்னைப் பிரிந் திருக்கவே மாட்டாரென்றும், நாமிருவரும் ஒன்றாகச் சந்தோசமாக எங்கள் ஆத்தியடி வீட்டிலேயே கடைசிகாலம் வரை வாழ்வோம் என்றும் கற்பனை யில் மிதந்திருந்தோம்.*

*1976 இல் எனது மூத்தமகள் வதனாவுக்கு திருமணம் நிகழ்ந்தது. மருமகனும் எங்கள் எட்டுப் பிள்ளைகளோடு ஒன்பதாவதாகச் சேர்ந்து எங்கள் வீடு சந்தோசத்திலும் கலகலப்பிலும் மிதந்தது.அவை யெல்லாம் மறக்கவே முடியாத இனிய காலங்கள்! 1984ம் ஆண்டு செப்டெம்பர் 1ந்திகதி எமது பருத்தித்துறை நகரில் இலங்கை இராணுவம் தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்திய அடாவடித்தனங் களில் எமது மருமகனின் புத்தகக்கடையும் (Kamala*

& *Brothers)* எரிக்கப் பட்டு விட்டது. அதனைத் தொடர்ந்து இலங்கை இராணுவம் பருத்தித்துறை யில் நடாத்திக் கொண்டிருந்த அட்டகாசங்களைத் தாங்க முடியாது, இனிமேல் இந்த நாட்டில் இருக்க முடியாது என்ற நிலையில் அவர் நாட்டைவிட்டுப் புறப்பட்டு ஜேர்மனிக்குச் சென்று விட்டார். கொஞ் சக் காலமாக இனி எப்போ எமது பிள்ளையைக் காண்போமென்ற ஏக்கமும் தவிப்பும் அழுகையுமாக நாமிருந்தோம்.

இதற்குள் எமது ஆறாவது பிள்ளையான பரதனும்(மொறிஸ்) நாட்டுக்காகப் போராட என்று 1985இல் வீட்டை விட்டுப் போய் விட்டான். அவனைத் தொடர்ந்து 1987, ஜனவரி 17ந் திகதி அடுத்தவன் சபாவும்(மயூரன்) நாட்டுக்காகப்போராட என்று போய் விட்டான். நாட்டுக்காகத்தானே எமது பிள்ளைகள் போயிருக்கிறார்கள் என்று எம் மனதைத் தேற்றினாலும், அவர்கள் எம்மோடு வாழ்ந்திருந்த அந்த இதமான வாழ்க்கையையும் அங்கு போர்க்களத்தில் வாழும் கடினமானவாழ்க்கை யையும் நினைத்து, ஒப்பிட்டுப் பார்த்து தாங்க முடியாது கலங்குவோம்.

இலங்கை இராணுவத்தின் கெடுபிடிகளும் அட்டகாசங்களும் கூடிக் கூடிக் கொண்டு வர எமக்கு அதாவது எமது குடும்பத்திற்கு மிகவும் உதவி யாகவும் ஊன்று கோலாகவும் இருந்த எங்கள் மூன்றாவதுபிள்ளையான மகன் பார்த்திபனும், தான் நடாத்திக் கொண்டிருந்த புத்தகக் கடையை விட்டு, எம்மையும் விட்டு சவுதிக்குப் போய் விட்டான். அப்போது எங்கள் மூத்தமகன் ராஜனும் ஊரில் இருக்கவில்லை. வற்றாப்பளையில் தனது மனைவி குழந்தைகளுடன் இருந்தான்.

எல்லோரும் இப்படியே திக்குத் திக்காய்ப் பறந்துவிட, நாங்கள் மிகவும் தனித்துப்போனவர்கள் போலானோம். வீட்டில் எங்களோடு எஞ்சியிருந்த வர்கள் எங்கள் மூன்று பெண்பிள்ளைகள் மட்டுமே!

*அவர்களில் எங்கள் இளையமகள் சந்திரா யாழ். கச்சேரியில் வேலை பார்த்துக் கொண்டிருந் தாள். வேலை நிமித்தம் அவள் தினமும் இராணுவக் கெடுபிடிகளுக்கு மத்தியில் பருத்தித்துறையில் இருந்து பஸ்ஸில் யாழ்ப்பாணம் போய் வருவாள். சின்ன மகள் பிரபா திருமணமாகி பருத்தித்துறை பலநோக் குக்கூட்டுறவுச்சங்கக் கிளையில் வேலை பார்த்துக் கொண்டிருந்தாள். கடைசி மகள் பாமா கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தாள்.*

*1989இல் எங்கள் நாட்டில் போர் உக்கிர மடைந்திருந்தது. இந்திய இராணுவம் இனியில்லை யென்ற அளவுக்கு அட்டூழியங்களைச் செய்து கொண்டிருந்தது. நாட்டுக்காகப் போராடச் சென்ற எனது மகன் மொறிஸ் (பரதன்) பருத்தித்துறைப் பிரதேசப் பொறுப்பாளராக மிகவும் பொறுப்புள்ள ஒருவனாக, தேசப்பற்றுள்ள ஒரு வீரனாகச் செயற்பட்டுக் கொண்டிருந்தான். அவனைத் தேடி வரும் இந்திய இராணுவம் எங்களையெல்லாம் கொடுமைப் படுத்தியது. அதனால் அங்கிருக்க முடியாது நாங்கள் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வந்த எங்கள் ஆத்தியடி மண்ணை விட்டு, எங்கள் அழகிய சொந்தவீட்டைவிட்டு யாழ்ப்பாண நகர்ப்பகுதிக்குச் சென்றோம். அங்கு என் கணவரின் உத்தியோக வதிவிடமான புகையிரதநிலையஅதிபர் மனையில் வாழத் தொடங்கினோம்.*

*எங்கள் மண்ணில் போரும் மரணமும் மலிந்து கிடந்தன. ஒவ்வொருவர் வாழ்வும் கேள்விக் குறியாகிக் கொண்டிருந்தது! எங்கள் ஊரான பருத்தித்துறையில் இந்திய இராணுவம் என் மகன் மொறிஸை(பரதன்) வலை வீசித் தேடித் திரிந்து கொண்டிருந்தது. அந்நேரம் எனது கணவரோ இந்திய இராணுவமுகாமாகவே மாறியிருந்த யாழ். புகையிரதநிலையத்தில் அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தார். எங்கள் மகன் பருத்தித்துறைப் பிரதேசத்துக்கே விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பொறுப்பாளராக இருக்கிறான் என்பது தெரிய வந்*

தால், எம்மைச் சுற்றியிருக்கும் இந்திய இராணுவத்தால் எனது கணவருக்கும் எங்கள் குடும்பத்துக்கும் எந்நேரமும் எத்தகைய ஆபத்தும் நிகழலாம் என்ற அச்சம் எப்போதும் எனக்கும் மற்றவர்களுக்கும் உள்ளூர இருந்து கொண்டேயிருந்தது.

01.05.1989 அன்று பருத்தித்துறை மண்ணில் நடைபெற்ற இந்திய இராணுவத்துடனான நேரடி மோதலில் எங்கள் மகன் மொறிஸ்(பரதன்) வீர மரணமடைந்த நிகழ்வோடு நாம் மிகவும் ஆடிப் போனோம். துயர் தாங்காது தவித்தோம்!

அதே வருடம், நிட்சயிக்கப்பட்ட படி எங்கள் இளைய மகள் சந்திராவுக்குத் திருமணம் நடந்தது. அவளும் அவளது கணவர் ரவியுடன் 1990இல் இலண்டனுக்குப் போய் விட்டாள்.

அதற்குள் எமது மூத்தமகன் ராஜனும் இலங்கை இராணுவத்தின் எறிகணை வீச்சுக்குப் பலியாகி தனது ஒரு காலையும் மறு காலின் பெரு விரலையும் ஒரு கையின் செயற்பாட்டையும் இழந்து முடமானான். அவனும் நாட்டுக்காக உதவி புரியப் போய், விடுதலைப்புலிகளின் புலனாய்வுப் பிரிவில் மொழிபெயர்ப்பாளராகப் பணியாற்றத் தொடங்கினான்.

11.11.1993இல் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்களின் பிரத்தியேக மெய்ப்பாதுகாவலனாக(Jacket-Bodyguard) இருந்த எங்கள் சின்ன மகன் சபா(மயூரன்)வும் பூநகரிப் பெருந்தளச் சமரில் வீரமரணமடைந்து விட்டான்!

அதன் பின் எங்கள் கடைசி மகள் பாமாவும் ஜெர்மனிக்குப் பயணமாகி விட்டாள்.

அதன் பின்தான் நானும் எனது கணவரும் ஊரைவிட்டே வெளிக்கிட்டு கொழும்புக்குப் பயண மாகி மீண்டும் அங்கிருந்து திரும்பி வவுனியாவில்

*நிலை கொண்டோம். அப்போது வவுனியாவில் இருந்து வடபகுதிக்குப் போகமுடியாத சூழல். நாட்டு நிலைமை மிக மோசமாகியிருந்தது. சற்றே தள்ளி வற்றாப்பளையில் இருந்த எங்கள் மூத்தமகன் ராஜனைக் கூட போய்ப் பார்க்க முடியாதவாறு ஊரடங்குச் சட்டம் எம்மை அடக்கி, அடைத்து வைத்திருந்தது.*

*இத்தனை துன்பங்களும் ஒன்றாகச் சேர்ந்து எனது கணவரை உலுக்கி எடுத்து அவரை ஒரு நோயாளியாக்கி விட்டது. எங்கள் கற்பனை வாழ்வு சிதறிச் சிதைந்து, உருக்குலைந்து போனது! நானும் எனது கணவரும் வவுனியாவில் தனிமரமாக நின் றோம். அவருக்கு ஒரு பிள்ளைகளையும் பார்க்க முடியவில்லையே என்ற ஏக்கம். இழந்த பிள்ளைக ளின் பிரிவாற்றாமை. எல்லாம் சேர்ந்து மிகுந்த மனவேதனையில் உழன்றார்.*

*இந்த நிலையில் எமது மூத்தமகள் வதனா ஜெர்மனியிலிருந்து அப்பாவைப் பார்க்க வருகிறாள் என்பதை அறிந்து அவர் அடைந்த சந்தோசம் சொல்லில்வடிக்க முடியாதது. அன்று 1997, நவம்பர் 21ந்திகதி. அவள் வந்து இறங்குவாள் என்று அவர் அதிகாலை மூன்று மணிக்கே எழுந்து "அம்மா, வதனா இண்டைக்கு வருவாளெல்லோ! எழும்பும். முகத்தைக்கழுவி, தேத்தண்ணியைப் போடும்" என்று எவ்வளவு ஆரவாரத்தோடு அவளை எதிர்பார்த்தார். பன்னிரண்டு வருடங்களின் பின் வந்த அவளைக் கண்டதும் கட்டியணைத்து ஒரு குழந்தையைப் போலக் குமுறியழுதார். அவள் அங்கு நின்ற பத்து நாட்களும் அவரடைந்த மகிழ்ச்சிக்கோ அளவில்லை. அவளும் அவரை விட்டுப் பிரியாமல் அவருக்கு வேண்டியவைகளைச் செய்து கொண்டு, அன்பும் ஆதரவுமாக அவரோடேயே நின்றாள்.*

*நவம்பர் 30ந்திகதி என்று நினைக்கிறேன். அவள் கட்டாயம் ஜெர்மனிக்குத் திரும்ப வேண்டிய நிலை. அவள் பத்திரமாக அங்கிருந்து அவளது*

*கணவர் பிள்ளைகளிடம் போய்ச் சேர்ந்து விட வேண்டும் என்பதே அவரது விருப்பமாகவும் இருந் தது.அவள் பயணமானதும் "இனி நான் செத்தாலும் பரவாயில்லை. என்ரை மகள் வந்து என்னைப் பார்த்திட்டுப் போயிட்டாள். அது போதும் எனக்கு! அம்மா... நான் செத்தால் நீரே கொள்ளி வையும். இனி ஒரு பிள்ளையளும் வரமாட்டினம்" என்று சொல்லிக் கலங்கினார். அவளில் அவருக்கு ஒரு தனிப்பாசம். மூத்தமகன் ராஜன் பிறந்த பொழுது அவர் எமது நாட்டு 1958க் கலவரத்தில் யாவையும் இழந்தார். பின் வதனா பிறந்ததும் இழந்ததை எல்லாம் உழைத்துச் சேர்த்தார். அதுவும் ஒரு காரணமாயிருக்கலாம்.*

*அடுத்தநாள் காலை, டிசம்பர் 1ந்திகதி காலை என் அன்புக் கணவர் நித்திரையால் எழும்பி, மகள் வதனா நல்லபடி கொழும்பு போய்ச் சேர்ந்து விட்டாள் என்றதும் ஒரு வித நிம்மதியுடன் ''அம்மா, நீர் போய் பாஸ்(pass)ஐ எடுத்துக் கொண்டு வாரும். நான் இனி வரமாட்டன். நீர் பிள்ளைகளிடம் போம்" என்று சொல்லி என்னைப் பாஸ் எடுக்க அனுப்பி விட்டு நான் திரும்பி வரும் வரை காத்திருந்தார். அவருக்குத் துணையாக நான் விட்டிட்டுப் போன பிள்ளையிடம் "அம்மா வந்திட்டாவோ?" என்று அவர் கேட்கும் போது நானும் பாஸ் எடுத்துக் கொண்டு திரும்ப வந்து சேர்ந்தேன். அந்தப் பிள்ளை என்னிடம் "அம்மா வந்திட்டாவோ? என்று அப்பா இரண்டு மூன்று தடவையள் கேட்டவர். சரி, நீங்கள் வந்திட்டிங்கள் தானே அம்மா... நான் போறன்" என்று சொல்லி விட்டுப் போய் விட்டது.*

*அப்பா என்னிடம் "வந்திட்டீரே அம்மா! முதல்லை தேத்தண்ணியைப் போட்டுக் குடியும். அதுக்குப் பிறகு எனக்கு ஹொர்லிக்ஸ்ஸை தாரும்" என்றார். நான் தேநீரைப் போட்டு வைத்து விட்டு, அவருக்கு ஹொர்லிக்ஸைக் கரைத்து அவர் படுக்கையில் இருக்கவே கரண்டியால் எடுத்து அவர்*

*வாயில் விட்டேன். ஒரு கரண்டி ஹொர்லிக்ஸை மெலிதாய் விழுங்கினார். அடுத்த கரண்டி வாயில் விட வெளியில் வழிந்தது. அடுத்த கரண்டியும் விட வெளியிலேயே வந்தது. "அப்பா.. அப்பா.." என்று கூப்பிட்டேன். ஒரு சத்தமும் இல்லை. அந்த நேரம் பார்த்து வழக்கமாக எங்களைத் தேடி வந்து, எங்களுக்குப் பலவகையிலும் உதவிகள் புரியும் 'ஐயா' என்ற தம்பியும் "அம்மா... அப்பா எப்பிடி இருக்கிறார்?" என்று கேட்டுக்கொண்டே வீட்டுக் குள் நுழைந்தார்.*

*"ஐயா இங்கை வாங்கோ.வந்து அப்பாவைப் பாருங்கோ" என்று பதட்டத்தோடு கூப்பிட்டேன். அவர் வந்து "அப்பா.. அப்பா.." என்று கூப்பிட்டுப் பார்த்தார். ஒரு பதிலும் இல்லை. அவர் உடனே அப்பாவை பரிசோதித்துப் பார்த்துவிட்டு என்னிடம் "அப்பா நம்மை விட்டுப் போய் விட்டார்" என்று சொன்னபோது எனக்குச் சிறிது நேரம் ஒன்றுமே புரியவில்லை. பிறகு என்னைப் பார்த்து "அம்மா, கலங்காமல் இருங்கோ" என்றார்.*

*இவ்வளவு தெளிவாகவும் நேர்த்தியாகவும் நான் செய்யவேண்டியவைகளை எல்லாம் வரிசை யாகச் சொல்லிச் சொல்லி என்னைச் செய்ய வைத்து விட்டு ஒரு விதமான சத்தமுமில்லாது எனது கணவர் அமைதியாகி விட்டாரே! என்னால் சிறிது நேரம் ஜீரணிக்கவே முடியவில்லை. நடப்ப தெல்லாம் நிஜந்தான் எனப் புரிய நேரமெடுத்தது! மலைப்பாக இருந்தது! ஐயா என்பவர் எமது உற்றார் உறவினர் யாவருக்கும் அறிவித்து ஆவன செய்யத் தொடங்கினார்.*

*அன்று மாலையே நான்கு மணியளவில் எனது கொள்ளியுடன் எனது கணவர் மயானம் நோக்கிப் பயணமானார். எட்டுப்பிள்ளைகளில் ஒரு பிள்ளை கூட அவரருகில் இருக்கவில்லை.*

*நானும் அப்பாவும், எங்கள் சொந்த வீடான*

*ஆத்தியடி வீட்டில்தான் கடைசிகாலம்வரை வாழ்ந்து சாவோம் என்ற கனவுடன் வாழ்ந்தோம். எங்கள் இருவரது கனவும் அப்படியே வெறும் கனவாகவே போய் விட்டது.*

*இதை நான் எழுதத் தொடங்கி நீண்ட வருடங்களாகி விட்டன. இப்போது, 2016, மே மாதத்திலிருந்து நான் ஜெர்மனியில் Schwäbisch Hall என்னும் நகரில், நல்லதொரு வீட்டில் அமைதியாக வும் சௌகரியமாகவும் நினைவுகள் மட்டும் அழியாது வாழ்ந்து கொண்டிருக்கிறேன். எனது மூத்தமகள் வதனா எனக்கான இந்த வசதிகளைச் செய்து தந்திருக்கிறாள். எனது மகள் அருகில் இருப்பதால் எனக்கு வேண்டிய சகல உதவிகளை யும் செய்து தருகிறாள். எனது பேரன், வதனாவின் மகன் திலீபன். அவனும் குடும்பத்துடன் அருகி லேயே இருக்கிறான். அவனும் அவனது மனைவி பிள்ளைகளும் அடிக்கடி வந்து, சந்தித்து, வேண்டிய உதவிகளைச் செய்து தருகிறார்கள். எனது மகன் பார்த்திபன் சற்றுத் தொலைவில் இருந்தாலும் அவனும் அடிக்கடி வந்து என்னைச் சந்தித்து எனக்கு வேண்டிய உதவிகளையும் செய்து தந்து செல்கிறான். எனது இளையமகள் சந்திராவும் அவளின் கணவர் ரவியும் கூட இலண்டனிலிருந்து அடிக்கடி என்னிடம் வந்து என்னைப் பார்த்து எனக்கு விருப்பமானவற்றைச் செய்து தந்து செல்கிறார்கள்.*

*இன்று எனது அன்புக் கணவரின் நினைவு நாள். எல்லாம் அழியாத நினைவுகளாக நெஞ்சில் தோன்றித் தோன்றி என்னைப் புரட்டுகின்றன. அவரும் என்னுடன் கூட இருந்திருந்தால் எவ்வளவு சந்தோசமாகவும் நிம்மதியாகவும் இருந்திருக்கும். மனம் ஏங்குகிறது. என்ன செய்ய? நாம் நினைத்த படியா எல்லாம் நடக்கிறது?*

*-01.12.2017*

## எங்கு சென்றாய் என்ன விட்டு இனி எங்கு நான் காண்பேன் உனைப் போலொரு தங்கையை!

*நாங்கள் பருத்தித்துறையில் உள்ள ஆத்தியடி என்னும் ஒரு அழகிய ஊரில் பிறந்து வளர்ந்தோம். எங்கள் ஐயா ஆறுமுகம். அம்மா விசாலாட்சி. எங்கள் ஐயாவுக்கும் அம்மாவுக்கும் நாங்கள் ஐந்து பிள்ளைகள். நான்தான் மூத்த பிள்ளை. அடுத்தது தம்பி குமாரசாமி. குமாரசாமிக்கு அடுத்தது தங்கை உமையாம்பிகை. அவளுக்கு அடுத்தது தம்பி வேல் முருகு. கடைசித் தங்கை ஞானாம்பிகை.*

*எங்கள் கடைசித் தங்கை ஞானாம்பிகை நாய் கடித்ததால் பத்து வயதிலேயே இறந்து போனாள். அது சொல்லொணாப் பெருந்துயர். சில காலம் பாடசாலைக்கே போகமனமின்றிச் சோர்ந்து போயிருந்தேன்.*

*ஞானத்தின் இறப்பின் பின் எஞ்சிய நாங்கள் நால்வரும் ஒருவருக்கொருவர் மிகுந்த அன்புடனும் மரியாதையுடனும் வளர்ந்து வந்தோம். ஒரு வயதில் எனது தம்பியர் இருவரும் வேலையாகி கொழும் புக்குப் போய் விட்டார்கள். தங்கை உமையாம் பிகையும் நானும் தான் வீட்டில் அம்மா ஐயாவுடன் இருந்தோம்.*

*நானும் தங்கையும் ஒருவருக்கொருவர் துணையாகவும் உதவியாகவும் இணைபிரியாது மிகுந்த பாசத்துடன் வளர்ந்து வந்தோம். எனக்கு எனது 22வது வயதில் 1956ம் ஆண்டு, மார்கழி மாதம், 13ந் திகதி விவாகம் நடைபெற்றது.*

*அதன் பின்னும் என் தங்கை என்னில் மிகுந்த அன்புடனும் அக்கறையுடனும் மகிழ்ச்சி யுடனும் எனக்குத் தேவையான எல்லா உதவி களையும் ஓடியோடிச் செய்து தருவாள். என்ன தேவையென்றாலும் பார்த்துப் பார்த்துச் செய்வாள். எனது கணவருடனும் அன்போடும் மரியாதை யோடும் பழகுவாள்.*

*அப்போது எனது கணவர் கொழும்பில் புகையிரத நிலைய அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தார். அங்கு அவர் ஒரு வீடு பார்த்து எடுத்து விட்டு, என்னையும் அங்கு கூட்டிக் கொண்டு போவதற்கென 1957ம் ஆண்டு மாசி மாதம் 15ந் திகதி வீடு வந்தார்.*

*எனது தங்கை ஓடி ஓடி எனக்குத் தேவை யானவைகளை அம்மாவோடு சேர்ந்து எடுத்து வைத்துக் கொண்டிருந்தாள். போகும் நேரம் வந்தது. நான் வெளிக்கிட்டு கார் நிற்கும் இடத்திற்குக் கிட்டப் போக, அவள் ஓடி வந்து எனது இரு கைகளையும் பிடித்துக் கொண்டு மிகுந்த துயரோடு அழத் தொடங்கி விட்டாள்.*

*எனக்கு என்ன செய்வதென்றே தெரியாமல் இருந்தது. கணவரோடு போகும் சந்தோசம் ஒரு புறமும் தங்கையைப் பிரிவதின் துயர் இன்னொரு புறமுமாக நான் அல்லாடினேன். எனது துயரை விட எனது தங்கையின் துயரைத்தான் என்னால் தாங்க முடியாதிருந்தது.*

*எனது கணவர் "அடுத்த மாசம் நான் உங்கடை அக்காவைக் கூட்டிக் கொண்டு வருவன். கவலைப்படாமல் இருங்கோ" என்று சொல்லி எனது தங்கையை ஒருவாறு சமாதானப் படுத்தி என்னை அழைத்துச் சென்றார்.*

*நானும் எனது தங்கை உமையாம்பிகையும்*

*இருபது வருடங்களுக்கு மேலாக ஒரு நாளும் பிரியாது இணைந்து அன்போடு வாழ்ந்து வந்தோம்.*

*அதன் பின்னர் வந்த அந்தப் பிரிவையும் அன்று அவள் அழுத அழுகையையும் என்னால் இன்றும் மறக்க முடியவில்லை.*

*நான் கொழும்பில் இருக்கும் போதும் அவள் எனக்குத் தேவையான பொருட்கள், சாப்பாடுகள் என்று எல்லாவற்றையும் அம்மாவோடு சேர்ந்து செய்து அனுப்பி வைப்பாள். அடிக்கடி கடிதம் எழுதுவாள். அவள் பிரிவு என்னையும் பெரிதும் வாட்டியது.*

*அதற்கிடையில் நான் கர்ப்பமானேன். எனது கணவர் என்னை ஊருக்கு அழைத்து வந்து என் அம்மாவின் கவனிப்பில் விட்டு விட்டுச் சென்றார். அப்போது எனது தங்கை என்னை எவ்வளவு அன்புடன் பராமரித்தாள்! இப்போது நினைத்தாலும் நெஞ்சு நெகிழ்கிறது.*

*எனக்கு எனது மூத்தமகன் ராஜன் 1958ம் ஆண்டு ஜனவரி மாதம் 30ந் திகதி (30.01.1958) பிறந்தான். அவனை பால் கொடுக்க மட்டுமே அவள் என்னிடம் தருவாள். அவனுக்குக் குளிக்க வார்ப்பது, அவனைச் சோடனை செய்வது என்று எல்லாமே அவள்தான் செய்வாள். அவன் என்னை 'அக்கா' என்றுதான் கூப்பிடுவான். அவ்வளவு தூரம் அவன் அப்படி அவளோடு ஒன்றி விட்டிருந்தான்.*

*பின்பு இரண்டாவதாக எனக்கு மகள் வதனா உருவானாள். அப்போது எனது கணவர் மருதானை புகையிரத நிலையத்தில் கடமையாற்றிக் கொண்டு இருந்தார். அவருக்கெனக் கொடுக்கப் பட்டிருந்த ரெயில்வேக்குச் சொந்தமான வீடு வத்தளையில் இருந்தது. அங்குதான் நான் அப்போது கணவருடன் இருந்தேன்.*

ஒரு நாள் தவறுதலாக வீழ்ந்து விட்டேன். மேல் மாடியிலிருந்து கீழ்மாடிக்குரிய படிகளில் உருளத் தொடங்கியதில் என் நினைவையும் இழந்து விட்டேன். உடனே எனது கணவர் என்னை முதலில் அங்குள்ள மருத்துவ மனைக்குக் கொண்டு சென்றார். பின்னர் எனது அம்மாவிடம் கொண்டு வந்து விட்டார்.

அம்மாவோடு சேர்ந்து எனது அருமைத் தங்கை எனக்குச் செய்ய வேண்டியவைகளை யெல்லாம் செய்து, என்னை மிகுந்த அன்போடு கவனித்தாள்.

பருத்தித்துறையில் மந்திகை மருத்துவ மனை யில் எனக்குப் பிரசவம் நடந்தது. குழந்தை வதனா எட்டு மாதத்திலேயே பிறந்து விட்டதால், சரியாக ஒரு மாதம் மூச்சைத் தவிர வேறெந்தச் சத்தமும் இருக்கவில்லை. அந்த நேரம் எனது தங்கை பட்ட பாட்டையும் வேதனையையும் என்னால் மறக்கவே முடியாது. வதனா கண் முழித்து கைகால் ஆட்டி அழத் தொடங்கியதும் தங்கை அவளை அள்ளி எடுத்து, அரவணைத்து எவ்வளவு பேருவகை கொண்டாள்! தேவையான எல்லாவற்றையும் தானே செய்து, குழந்தையையும் என்னையும் என் தங்கையே பராமரித்தாள். என்னால் அவள் செய்த வைகளை மறக்கவே முடியாது.

வதனாவும் ராஜனைப் போல் என்னை 'அக்கா' என்றே கூப்பிடுவாள். 'என்னை அம்மா என்று கூப்பிடுகிறார்கள் இல்லையே' என்று எனக்கு ஒரு பாட்டில் அழுகையாக இருந்தாலும் தங்கையின் அன்பில் நான் திளைத்திருப்பேன்.

எனக்கு மூன்றாவதாக மகன் பார்த்திபன் பிறந்த போது தங்கைக்கென்று அம்மா ஒரு வீடு கட்டி, அவர்கள் எல்லோரும் அங்கு குடியிருக்கப் போய் விட்டார்கள். அந்த வீடும் எனது வீட்டிற்கு

*அருகிலேயே இருந்ததினால் ஒவ்வொரு நாளும் நானும் தங்கையும் சந்திப்போம்.*

*சில காலம் போக எனது தங்கைக்கு பல பிரச்சனைகளின் மத்தியில் விவாகம் நடந்தது. விவாகம் முடிந்த உடனேயே அவள் கணவரோடு மாங்குளம் போய் விட்டாள். அதன் பின்னர் நீண்ட காலம் அவளைக் காணாமல் கலங்கி அழுதேன்.*

*காலங்கள் மாறி அவள் மீண்டும் எம்மிடம் வந்த போது அவளுக்கு இரண்டு பெண்குழந்தைகள். அவர்களுடன் அவள் தனது ஆத்தியடி வீட்டில் வாழத் தொடங்கினாள். ஆனால் அவள் வரும் போது மிகுந்த சுகவீனமுற்றிருந்தாள். அவளின் சுகவீனத்திற்கு அம்மாதான் வைத்தியங்கள் செய்து ஓரளவு மாற்றினா.*

*பின்னர் படிப்படியாக அவளுக்கு இன்னும் குழந்தைகள் பிறந்தன. அவளது குழந்தைகளும் எனது குழந்தைகளும் ஒன்றாக விளையாடுவார்கள். சண்டை பிடிப்பார்கள். ஒன்றாகப் பாடசாலைக்குச் செல்வார்கள். அந்தச் சந்தோசங்களும் ஒரு பொழு தில் நின்று போயின. அவள் அவளது கணவரின் பெற்றோரின் விருப்பத்துக்கமைய மீண்டும் பிள்ளை களுடனும் கணவருடனும் மாங்குளத்துக்குப் போய் அங்கேயே வாழத் தொடங்கி விட்டாள்.*

*அதன் பின்னர் அடிக்கடி அவளைச் சந்திப்பதற்கான வாய்ப்புகள் குறைந்து போயின. இருந்தாலும் அவ்வப்போது அவள் ஆத்தியடிக்கு வருவாள். நாங்களும் அவளிடம் மாங்குளம் போய் சந்தோசமாக ஓரிரு நாட்கள் தங்கி நின்று வரு வோம். எனது கணவர் மாங்குளம் புகையிரத நிலையத்தில் கடமையாற்றிக் கொண்டிருந்த பொழுது அவளது பிள்ளைகள் வந்து 'பெரியப்பா' என்று அளவளாவி அவரைத் தங்கள் வீட்டுக்கும் கூட்டிக் கொண்டு போவார்கள்.*

*அதன் பின், காலஓட்டத்தில் பல மாற்றங்கள் நிகழ்ந்தன. அவளது மகன் ஜெர்மனிக்குச் சென் றான். அங்கு அவன் ஒரு நிலைக்கு வந்ததும் தனது சகோதரங்களை ஒவ்வொருவராக அங்கு கூப்பிட்டான். தங்கையின் கணவரும் ஒரு பொழு தில் இறந்து போக அவளும் 1998இல் ஜெர்மனிக்கு வந்து சேர்ந்தாள்.*

*நானும் அப்போது எனது பிள்ளைகளில் இருவரையும் கணவரையும் பறிகொடுத்த நிலையில் ஜெர்மனிக்கு எனது பிள்ளைகளிடம் வந்து சேர்ந்து விட்டேன்.*

*ஜெர்மனியில் நான் Mannheim இலும் எனது தங்கை Pforzheim இலும் இருந்தோம். இரு நகரங் களும் கிட்டக் கிட்ட இருந்ததால் எனது மகன் பார்த்திபன் என்னை அடிக்கடி அவளிடம் கூட்டிப் போவான். அவளது பிள்ளைகளும் இயலுமான பொழுதுகளில் அவளை என்னிடம் கூட்டி வருவார் கள். அந்தச் சந்திப்புகள் எல்லாம் எப்போதும் மிகவும் சந்தோசமான சந்திப்புகளாகவே இருந்தன.*

*எல்லாச் சந்தோசங்களும் நீண்ட காலம் நிலைத்திருப்பதில்லைத்தானே. எனக்கு இயலாமை கூடிக் கொண்டு வர 2016இல் எனது மகள் வதனா என்னைத் தனது நகரான Schwaebisch Hallக்கு அழைத்து வந்து விட்டாள். அது எனக்குப் பெரும் ஆறுதலான, நல்ல விடயமாக அமைந்திருந்தாலும் அதன் பின் எனது அன்புத் தங்கையை அடிக்கடி சந்திப்பதற்கான வாய்ப்புகள் வெகுவாகக் குறைந்து போயின. எப்போதாவதுதான் நான் அவளிடம் போவேன். அதே போல எப்போதாவதுதான் அவ ளும் என்னிடம் வருவாள். அவை மிகமிக அபூர்வ மான சந்திப்புகளாகத்தான் இருக்கும்.*

*அதன் பின் தொலைபேசிதான் எங்களுக்குக் கை கொடுத்தது. நாங்கள் தொலைபேசியில்*

*நிறையக் கதைப்போம். அனேகமான பொழுதுகளில் தொடர்ந்து ஒவ்வொரு நாளும் கதைப்போம்.*

*கடந்தவருடம் 2019, கார்த்திகை மாதம், என் இளையமகள் சந்திராவும் அவளின் கணவர் ரவியும் என்னைப் பார்க்க இலண்டனிலிருந்து வந்திருந் தார்கள். மறுநாள் மாவீரர் நாள்(கார்த்திகை 27). அன்று அவர்கள் 'சித்தியைப் பார்த்திட்டு வருவோம்' என்று சொல்லி என் தங்கை வாழ்ந்து கொண் டிருக்கும் Pforzheim நகருக்கு என்னையும் தம்மோடு அழைத்துச் சென்றார்கள். நீண்ட மாதங்களின் பின்னர் அன்று என் தங்கையையும் அவளின் பிள்ளைகளையும் அவளின் பேரப்பிள்ளைகளையும் ஒன்றாகச் சந்திக்கக் கிடைத்த அந்த அருமையான சந்தோசமான நாளை என்னால் என்றைக்கும் மறக்கவே முடியாது. ஆனால் அதுதான் எனது அன்புத் தங்கையைச் சந்தித்துக் கொள்ளும் கடைசி நாள் என்பதை அப்போது நான் கனவிலும் நினைத் திருக்கவில்லை!*

*இப்போ சில மாதங்களின் முன்புதான் எனது அன்புத் தங்கை சிறீலங்காவில் இருக்கும் தனது மகளிடம் சென்றிருந்தாள். அவள் அப்படி அடிக்கடி போய் ஆறு மாதங்கள் வரை நின்று வருவாள். இம்முறை கொரோனாப் பிரச்சனை வந்ததால் அவளால் திட்டமிட்ட படி திரும்பி வர முடியாமற் போய் விட்டது. அவள் அதையிட்டுக் கவலை கொள்ளாமல் தன் சுகவீனங்களுக்கு அங்கு தமிழ் வைத்தியங்கள் செய்து கொண்டிருந்தாள்.*

*எல்லாம் சரியாகி மிகுந்த ஆரோக்கியத் துடன் அவள் திரும்பி வருவாள் என்ற நம்பிக்கை யோடு நான் இருந்தேன்.*

*அவள் இப்படிச் சொல்லாமல் கொள்ளாமல் திடீரென்று எங்களையெல்லாம் விட்டு விட்டுப் போய் விடுவாள் என்று எதிர்பார்க்கவேயில்லை!*

*எங்கள் சொந்த மண்ணிலேயே, அவள் நிம்மதியாக நிரந்தரத் தூக்கத்தில் ஆழ்ந்து விட்டாள்! இனசனமெல்லாம் கூடி அவளுக்கு ஆகவேண்டிய கடமைகளையெல்லாம் செய்து அவளை நல்லபடி அனுப்பி வைத்தார்கள். இத்தனை துன்பத்திலும் அது எனக்கு ஒருவித மனநிம்மதியைத் தருகிறது.*

*இருந்தாலும் இனி எங்கு நான் காண்பேன்*
*என் இனிய அன்புத் தங்கையை!*

*மனம் கலங்குகிறது!*

*–12.09.2020*

*!*

# பெத்தம்மாவும் பெத்தப்பாவும்

*எங்கள் அம்மாவின் தந்தை ஒரு புகழ்பெற்ற நாட்டு வைத்தியர். அவரை வேலுப்பிள்ளைப் பரியாரியார் என்றுதான் எல்லோரும் அழைப்பார் கள். அம்மாவின் தாயார் வேதநாயகி. நாங்கள் அம்மாவின் தந்தை பெத்தப்பாவை 'அப்பா' என்றும் அம்மாவின் தாயாரை 'பெத்தம்மா' என்றும் அன் பொழுக அழைப்போம்.*

*எங்கள் பெத்தம்மாவையும் பெத்தப்பாவையும் நினைத்தால் இப்போதும் என் மனம் கரையும்! கண்கள் குளமாகும்! அவர்கள் எங்கள் மீது வைத் திருந்த அன்பும் பாசமும் அளவற்றவை! அவர்களின் நேசமான அரவணைப்பும் வருடும் வார்த்தைகளும் என்றைக்கும் மறக்க முடியாதவை!*

*எங்கள் பெத்தம்மாவுக்கும் பெத்தப்பாவுக்கும் நான்கு பிள்ளைகள். அவர்கள் அன்னபூரணி (பெரியம்மா), புரொக்றர் பரம்சோதி (மூத்தமாமா), சேவையர் திருநாவுக்கரசு (இளைய மாமா). எங்க ளது அம்மா விசாலாட்சி அவர்களுக்குக் கடைசிப் பிள்ளை.*

*எங்கள் பெரியம்மா அன்னபூரணிக்கு ஒரே யொரு மகன் தான். அவர் பாலசுப்ரமணியம். மூத்த மாமா பரம்சோதிக்கு பிள்ளைகள் இல்லை. அவர் வேளையிலேயே இறந்து விட்டார். இளையமாமா திருநாவுக்கரசுவுக்கு ஒரு மகளும் மூன்று மகன் மாரும். எமது வீட்டுக்கும் இளையமாமா வீட்டுக்கும் இடையே ஒரு செம்பருத்தி வேலிதான் இருந்தது.*

அருகருகே இருந்ததால் இரு குடும்பங்களும் மிகமிக அந்நியோன்னியமாகப் பழகினோம். அல்லும் பகலும் அப்படி அன்பாக ஒன்றாகப் பழகிய இளையமாமா வின் மகள் பிறேமாவதி திருமணமாகி ஒரு குழந்தை யுடன் அகால மரணம் அடைந்து விட்டாள். அது ஒரு பெருந்துயர். எங்கள் அம்மாவுக்கும் ஐயாவுக் கும் நாங்கள் ஐந்து பிள்ளைகள். பெத்தம்மாவும் பெத்தப்பாவும் எங்கள் மீது அதீத பாசம் கொண்ட வர்களாக இருந்தார்கள்.

எங்கள் பெத்தப்பா வைத்தியத்தில் பெயர் பெற்றவர். வேலுப்பிள்ளைப் பரியாரியார் என்றால் அவரை அறியாதவர்கள் அக்காலத்தில் யாரும் இருக்க மாட்டார்கள்.

அவர் ஆத்தியடியில் இருந்து வல்லிபுரக் கோவில், கற்கோவளம், துன்னாலை, கரவெட்டி, தம்பசிட்டி, இம்பிலிட்டி... என்று பல ஊர்களுக்கும் கால்நடையாகவே சென்று வைத்தியம் பார்த்து விட்டுவருவார். வைத்தியத்திற்காக அவர் சன்மானம் எதையும் ஒருபோதும் எதிர்ப்பார்ப்பவரில்லை.

வைத்தியம் பார்த்து விட்டுத் திரும்பி வரும் போது ரோஜாப்பூ, குரங்குவாற்பூ, அந்தி மந்தாரை, மயிர்மாணிக்கம், நந்தியாவட்டை, தாமரைப்பூ.. என்று பை நிறையப் பூக்கள் கொண்டு வருவார். பெரும்பாலும் அவை அவரிடம் மருத்துவம் பெற்ற நோயாளிகள் அவருக்கு அன்புக் காணிக்கையாகக் கொடுத்த பூக்களாக இருக்கும்.

ரோஜாப் பூக்கள் என்றால் எனக்குக் கொள்ளை பிரியம். அதனால் நான் அவர் வரும் வரை வழி மேல் விழி வைத்துக் காத்திருப்பேன். என்னை விட இன்னும் ஆவலாக தம்பி குமாரசாமி காத்திருப்பான். அவன் அந்தப் பூக்களுடன்தான் விளையாடுவான். சாமி வைத்து, அந்தப் பூக்களை வைத்துப் பூசை செய்வான்.

*பெத்தப்பாவுக்கு ரோஜாப்பூச்சம்பல் என்றால் மிகவும் பிடிக்கும். தினமும் அவரது காலைச் சாப்பாடு இடியப்பமும் ரோஜாப்பூச் சம்பலும்தான். அதனால் பெத்தம்மாவும் அந்த ரோஜாப்பூக்களுக் காகக் காந்திருந்து சம்பல் அரைப்பா.*

*வைத்தியம் பார்க்க என்று பெத்தப்பா அதிகாலையில் எழுந்து குளித்து முழுகி இடியப்பமும் ரோஜாப்பூச் சம்பலும் சாப்பிட்டு விட்டுச் சென்றார் என்றால் மீண்டும் இரவு வீட்டுக்கு வந்துதான் சாப்பிடுவார். வழியில் எங்கும் எதுவும் சாப்பிட மாட்டார்.*

*பெத்தப்பா வைத்தியத்திற்குத் தேவையான மூலிகை மருந்துகளைத் தன் கையால் தானே தயாரிப்பார். சம்பளத்துக்கும் உதவியாள் ஒருவரை வைத்திருப்பார். அந்த உதவியாள் தினமும் காலை யில் வந்து மருந்து அரைப்பது, உரைப்பது, கலப்பது, குழைப்பது... என்று இரவு வரை நின்று எல்லாம் செய்து விட்டுச் செல்வார். மூலிகை மருந்துகள் பெறுவதற்காக பலரும் பெத்தப்பாவிடம் வந்து போவார்கள்.*

*மூலவருத்தக்காரருக்கு கற்றாளை தெய்வம் போல.அவர்களுக்காகவே பெத்தப்பா கற்றாளையின் தோலை நீக்கி, துண்டு துண்டாக வெட்டி, சுத்தப் படுத்தி, மணம் போவதற்கு ஏழு தண்ணீரில் கழுவி இரு கோப்பைகளில் போட்டு வைத்திருப்பார். பார்ப்பதற்கு மிகவும் அழகாக, பளிங்குக் கற்கள் போல அவை பளபளக்கும். அதில் ஒரு கோப்பையை மூலவருத்தக்காரர் காலையில் எழுந்தவுடன் வெறு வயிற்றில் சாப்பிட வேண்டும். அதைத் தனக்கு முன்னாலேயே மூலவருத்தக்காரரைச் சாப்பிட வைப் பார். சுவையில்லாவிடினும் வாய்க்குள் போட்டால் அப்படியே வழுக்கிக் கொண்டு போய் விடும். மற்றையதை வீட்டுக்குக் கொண்டு போய் வெங்காயம் போட்டு நல்லெண்ணையில் பொரித்து*

*சோற்றுடன் மதியச் சாப்பாடாகச் சாப்பிடும்படி சொல்லிக் கொடுத்து விடுவார். சொல்லி வைத்து மூன்று மாதங்களில் மூலவருத்தம் மாறிவிடும்.*

*பெத்தம்மாவுக்கும் சில வைத்தியங்கள் தெரியும். பெத்தப்பா மருந்துக்காக வைத்திருக்கும் கற்றாழையில் சிறிதளவு எடுத்து, அவர் செய்வது போலவே ஏழு தண்ணீரில் கழுவி, என் தம்பி குமாரசாமிக்கு எப்பொழுதும் சாப்பிடக் கொடுப்பா. அதனை நல்லெண்ணையில் பொரித்து, சுடச்சுடச் சோறுடனும் கொடுப்பா.*

*பெத்தம்மா தன் இளமைக்கால நினைவுகளை அவ்வப்போது என்னுடன் பகிர்ந்துகொள்வா. அவ வீட்டு வேலைகள் செய்தவாறே எனக்குச் சொல்லிய பல கதைகள் இப்போதும் என் ஞாபகத்தில் இருக்கின்றன.*

*பெத்தம்மாவும் பெத்தப்பாவும் உறவு முறையில் நெருங்கிய மச்சாளும் மச்சானும் தான். பெத்தம்மா நல்ல சிவப்பழகி. பெத்தப்பாவின் பெற்றோர் அசைவம் சாப்பிடுபவர்கள். பெத்தப்பா சைவம். அதனால் பெத்தம்மா சின்னவயதிலிருந்தே பெத்தப்பா வீட்டுக்குப் போய் பெத்தப்பாவுக்குச் சமைத்து வைத்து விட்டு வருவது வழமையாக இருந்தது. அடிக்கடி நிகழும் அந்தச் சந்திப்பினாலோ என்னவோ பெத்தம்மாவை விரும்பி, அவவைத் தான் திருமணம் செய்வதென பெத்தப்பா தன் மனதிற்குள் சபதம் எடுத்திருந்தார். ஆனால் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் என் பெத்தம்மாவின் தகப்பன் நாகப்பருக்கும் என் பெத்தப்பாவுக்கும் இடையில் ஏதோ சண்டை வந்து கடுமையான மனக்கசப்பும் வந்து விட்டது. அதன் காரணமாக பெத்தம்மாவின் தந்தை நாகப்பர், பெத்தம்மா பெத்தப்பா வீட்டுக்குப் போவதையும் பெத்தப்பாவிற்குச் சமைத்துக் கொடுப்பதையும் முற்றாகத் தடை செய்து விட்டார். கூடவே பெத்தம்மாவுக்கும் பெத்தப்பாவுக்கும் இடை*

*யிலான காதலையும் தடை செய்து, எக்காரணம் கொண்டும் பெத்தப்பாவைத் திருமணம் செய்து கொள்வதற்கு ஒருபோதும் உடன்பட மாட்டேன் என்றும் நேருக்கு நேர் சொல்லி விட்டார்.*

*பெத்தப்பா எவருக்கும் அடிபணியாதவர். தான் நினைத்ததைச் சாதிப்பவர். அப்படியானவர் பெத்தம்மாவின்மேல் தான்கொண்ட பிரியத்தையோ காதலையோ யாருக்காகவும் விட்டுக் கொடுக்கத் தயாரக இருக்கவில்லை. சமயம் பார்த்து ஒருநாள், யாருக்கும் தெரியாமல் பின் வேலியைப் பிரித்து பெத்தம்மாவின் வீட்டிற்குள் புகுந்து, அவவைத் தன்னோடு கூட்டிக் கொண்டு போய் விட்டார்.*

*அது பெரிய சண்டையும் கோபமுமாக மாறி விட்டது. பெத்தம்மாவின் தந்தை நாகப்பரும் பெத்தம்மாவின் சகோதரர்களும் பெத்தப்பா மீது மிகுந்த கோபம் கொண்டவர்களாகி அது பெரும் பகையுமாகி விட்டது.*

*பெத்தப்பாவும் எதற்கும் பணிந்து போகத் தயாரக இருக்கவில்லை. பெத்தம்மாவும் பெத்தப்பா வுக்குப் பிடித்தமில்லாத எதையும் செய்ய முனைய வில்லை. அந்தச் சம்பவத்தோடு பெத்தம்மா தனது பெற்றோர், உடன்பிறப்புகள், உற்றார், உறவினர் எல்லோரிடமிருந்தும் ஒதுங்கி விட்டா. பெத்தம்மா வின் தந்தை நாகப்பரும் பெத்தம்மாவின் உடன் பிறப்புகளும் கூட அவவை மன்னித்து அவவுடன் உறவு கொண்டாடுவதற்கு முன்வரவும் இல்லை. முனையவும் இல்லை.*

*தந்தையின் விருப்பத்துக்கு மாறாக எங்கள் பெத்தம்மா, பெத்தப்பாவுடன் வாழப் புறப்பட்டுப் போனதால் ஏற்பட்ட பெரும்பிளவு அது.*

*என்னதான் கணவனின் அன்பும் அரவணைப்*

*பும் இருந்தாலும், தன் பெற்றோருடன், கூடப்பிறந்த சகோதரங்களுடன், உற்ற உறவுகளுடன் பழகாமல் இருக்க வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் பெத்தம்மாவுக்கு ஏற்பட்ட போது, அவ எத்தனை மனஉளைச்சலுக் கும் மனவருத்தத்துக்கும் ஆளாகியிருப்பா என்பதை அவ கூறிய பல கதைகளிலிருந்து என்னால் உணர முடிந்திருக்கிறது. அவ அந்தக் கதைகளைக் கூறிய போது நான் சிறுமியாக இருந்தேன். இப்போது பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை கள்... என்று எல்லோரையும் கண்டு, அவர்களோடு வாழ்ந்து கொண்டிருக்கும் எனக்கு, பெத்தம்மா சொன்ன பல கதைகள் பல பாடங்களை, பல சிந்தனைகளை, பல ஆச்சரியங்களை என்னுள் தோற்றுவிப்பதை என்னால் தடுக்க முடியவில்லை. அவை யாவும் முடிவற்ற வேதாந்தம் போல் ஒரு உணர்வு ஏற்படுகிறது!*

*எங்கள் பெத்தம்மாவினதும் பெத்தப்பா வினதும் பெற்றோர்களின் பிள்ளைகள், பேரப் பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்... என்று பிறந்தவர் களினால் பல்கிப் பெருகி நிறைந்து உருவானதே எங்கள் ஊரான ஆத்தியடி என்ற அழகிய சிற்றூர். ஆத்தியடி முழுவதும் எங்கள் பெத்தம்மாவினதும் பெத்தப்பாவினதும் சொந்தங்கள் தான்.*

*இந்தத் திருமணத்தின் பின்னர் அத்தனை சொந்தங்களுடனும் உறவுகொண்டாட முடியாமலே அவர்கள் வாழ்ந்து முடித்தார்கள் என்பதை நினைக்கும் போது என் பெத்தம்மாவின் சொல்ல முடியாத மனத்துயரம் என்னையும் வந்து தொற்றிக் கொள்வது போலிருக்கிறது. என் பெத்தம்மா யாரு டனும் பிழங்க முடியாமல் போனதால் பெத்தப்பா வும் அவர்களிலிருந்து விலகியே வாழ்ந்திருந்தார். இதனாலேயே என் பெத்தம்மா வழி உறவுகள் யாவரும் பின்னர் வந்த அடுத்தடுத்த சந்ததியினரும் மெல்ல மெல்லப் பிரிந்து இடைவெளிகள் அதிகமாகி அது நிரந்தரமாகவே ஆகி விட்டது.*

*ஆத்தியடி முழுவதும் பெத்தம்மாவினதும் பெத்தப்பாவினதும் பரம்பரைதான். ஆயினும் பெத்தம்மா தனித்து விடப்பட்டவள் போலவே வாழ்ந்திருக்கிறா. அவவுக்கு அந்தப் பாசமும் பிரிவுத் துயரமும் வாழ்க்கை முழுவதும் இருந்ததை நான் சிறுமியாக இருக்கும் போதும் உணர்ந்திருக்கிறேன். அவ எவ்வளவு கவலையுடன் வாழ்ந்திருப்பா என் பதை இத்தனை வருடங்களின் பின் இப்போது யோசிக்கும் போதும் என் நெஞ்சிற்குள் தாங்க முடியாத துயரம் ஏற்படுகிறது!*

*நான் ஆறு வயதுச் சிறுமியாக இருக்கும் போது, 1940 இல் என் பெத்தப்பா வேலுப்பிள்ளைப் பரியாரியார் மரணமானார். அவர் சுகவீனமாக ஒருபோதும் இருந்ததில்லை. திடீரென்று ஒருநாள் தடிமனும் காய்ச்சலும் வந்தது. திடீரென்று இறந்து போனார். அவ்வளவு தான்.*

*பெத்தப்பா மரணமான பின்னர் பெத்தம்மா என் இளையமாமாவுடன்(திருநாவுக்கரசு) போய் அவரது வீட்டில் இருந்தா. அவர் பெத்தம்மாவை அவவின் விருப்பப்படி அங்கிங்கு போக விட மாட்டார். தடுப்பார். அது பெத்தம்மாவுக்கு மனச் சங்கடங்களை உண்டாக்கிக் கொண்டிருந்தது. அதனால் பெத்தம்மா எங்கள் வீட்டுக்கே வந்து எங்களுடன் வாழத் தொடங்கி விட்டா.*

*எங்கள் ஐயா ஆறுமுகம் தம்பசிட்டியைச் சேர்ந்தவர். குமாரசாமியின் மகன். ஐயாவின் தாயார் ஐயா சிறுகுழந்தையாக இருக்கும் போதே இறந்து விட்டா. தந்தையும் வேளைக்கே இறந்து விட்டார். ஐயாவுக்கு ஒரு அக்காவும் ஒரு தம்பியும். ஐயாவின் பெரியம்மாதான் அவர்களை வளர்த்தா. அவவைத்தான் நாங்கள் அப்பாச்சி என்போம். ஐயா மிகுந்த ஆளுமையுள்ளவர். அவர் நீதிமன்றத்தில் கிளார்க் ஆக வேலை செய்தார். உறுதி எழுதுதல் அவரது பிரதான வேலையாக இருந்தது. அந்த*

*வேலையை அவர் தனது கடைசிக்காலம் வரை செய்து கொண்டே இருந்தார். ஐயா மிகுந்த கடவுள் நம்பிக்கையுள்ளவர். தினமும் காலையில் பூப்பறித்து சாமிக்கு வைத்துக் கும்பிடுவார். எங்கள் ஆத்தியடிப் பிள்ளையார் கோயிலில் புராணம் படிப்பவர்களில் எங்கள் ஐயாவும் முக்கியமான ஒரு ஆளாக இருந்தார். மிகவும் அழகாகவும் தெளிவாக வும் படிப்பார்.*

*1940 இல் ஐயா வேலை அலுவலாகச் சிங்கப்பூர் போயிருந்த பொழுது இரண்டாம் உலகப் போர் தொடங்கி விட்டது. அதனால் ஐயாவால் எங்களுடன் தொடர்பு கொள்ள முடியாத நிலை ஏற்பட்டிருந்தது. ஐந்து வருடங்களாக ஐயா இருக்கிறாரா இல்லையா என்று தெரியாமலே வாழ்ந்தோம்.*

*அந்தப் பொழுதில் ஊரவர்கள் எங்கள் அம்மாவிடம் "ஐயா போரில் செத்திருப்பார். தாலி யைக் கழட்டு, பொட்டை அழி" என்றெல்லாம் சொன்ன போதும் ஐயா திரும்பி வருவார் என்ற நம்பிக்கையோடு கழுத்தில் தாலியுடனும் நெற்றியில் பொட்டுடனும் அம்மா உறுதியுடன் வாழ்ந்தா.*

*அம்மா மிகுந்த பிரயாசி. சுறுசுறுப்பானவ. உடம்பை முறித்து அனைத்து வேலைகளையும் சளைக்காமல் செய்யக் கூடியவ. ஒரு ஆணுக்கு நிகராக உழைக்கும் வல்லமை மிக்கவ.*

*சிங்கப்பூருக்குப் போன ஐயா 1945 இல் போர் முடிந்து திரும்பி வரும்வரை அம்மாதான் நெல்லு வியாபாரம் செய்து எங்களை வளர்த்தா. அம்மா ஆயிரக்கணக்கில் நெல்மூட்டைகளை வாங்கி வந்து அதனைக் குற்றி அரிசியாக்கி விற்றுவரும் பணத்தில் எங்களைச் செழிப்பாக வாழ வைத்துக் கொண்டிருந்தா. எங்களிடம் பால்மாடுகளும் இருந் தன. அவையும் எமக்குப் பெருஞ் செல்வங்களாக*

இருந்தன. அம்மா அந்த வேலைகளுடன் மாயும் போதெல்லாம் பெத்தம்மாதான் எங்களுக்குச் சமைத் துத் தந்து எங்களின் தேவைகள் எல்லாவற்றையும் கவனித்து எங்களுக்கு உறுதுணையாகவும் பாதுகாப் பாகவும் இருந்தா.

பெத்தம்மாவின் கடைசிக் காலங்கள் எனக்கு இப்போதும் நன்றாக ஞாபகமிருக்கிறது. என் பெரியம்மா(அன்னபூரணி) பெத்தம்மாவை தனக்கு உதவியாக இருக்க வேண்டி தன்னுடன் ஓராங் கட்டை வீட்டிற்கு அழைத்துச் சென்று விட்டா. எங்கள் எல்லோருக்கும் அது சரியான கவலையாக இருந்தது. பெரியம்மா எங்கள் அம்மாவைப் போல துண்டு துணுக்காக வேலை செய்யக் கூடியவ அல்ல. பெத்தம்மாவுக்கு இயலாமை வந்து விட்ட அந்தக் கடைசிக் காலங்களில் பெரியம்மாவால் அவவைச் சரியாகக் கவனிக்க முடியவில்லை. அத னால் பெத்தம்மா ஒழுங்காக நேரத்துக்கு சாப்பிட முடியாமல், ஆளுதவிகளும் இல்லாமல் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருந்தா. அதைப் பார்த்து நாங்கள் மிகவும் மனம் வருந்தினோம்.

என் அம்மா (விசாலாட்சி) அவ்வப்போது பெரியம்மா வீட்டிற்குப் போய் பெத்தம்மாவிற்கு குளிக்க வார்த்து, சமைத்து வைத்து விட்டு வருவதுண்டு. நான் அச்சமயம் திருமணமாகி நான்காவது தடவையாகக் கற்பமாகியிருந்தேன். சந்திரா என் வயிற்றில் இருந்தாள். அப்போது நானும் போய், பெத்தம்மாவைப் பார்த்து விட்டு வருவேன். அவவின் தனிமை நிலை பார்த்து நான் அழுதிருக்கிறேன்.

பெத்தம்மா தன் பாசத்தைக் கொட்டி எங்களை வளர்த்தா. மிக்க அன்போடு பராமரித்தா. அதற்கு ஈடு இணையாக எங்களால் அவவைப் பார்த்துக் கொள்ள முடியாமற் போனதை நினைக்க இப்போதும் எனக்கு அழுகை வருகிறது!

*"மக்களைப் பெற்று*
*மகிழ்ச்சி அடைந்தேனோ..!*
*பிள்ளைகளைப் பெற்று*
*பெருமையடைந்தேனோ..!"*

*என்று என் பெத்தம்மா தன்பாட்டில் அடிக்கடி பாடிக் கொண்டிருக்கும் வரிகள் இப்போதும் எனக்குள் ஒலிப்பது போலிருக்கிறது!*

*எங்களுக்கு ஆசான்களாகவும் வழிகாட்டிகளாகவும் இருந்து அன்பையும் பாசத்தையும் கொட்டி எம்மைச் சீராட்டிப் பாராட்டி வளர்த்த எங்கள் பெத்தம்மா, பெத்தப்பா, அம்மா, ஐயா.. எல்லோரையும் இச்சமயம் ஒன்று சேர நினைத்துப் பார்க்கிறேன்.*

*வாழ்க்கை எத்தனை விநோதமானது! எம்மை சிருட்டித்தவர்கள், எம்மைச் செதுக்கியவர்கள்... எல்லோரும் ஒரு தருணத்தில் அவர்கள் இல்லாத இந்த உலகில் தனித்து வாழ்வதற்கான தைரியத்தை மட்டும் எம்மிடம் பரிசாகக் கொடுத்துவிட்டு சென்று விடுகிறார்கள்!*

*அவர்கள் இல்லாத இந்த உலகம் அழகோ அழகில்லையோ, என் நெஞ்சை நிறைத்திருக்கும் அவர்களது நினைவுகள் என்றும் அழகானவை!*

# *ப்ரிய பரதா..!*

*ப்ரிய பரதா!*
*நின் மரணம்*
*வீர மரண மென்பதால்*
*ஊரெல்லாம் எம்மை*
*அழவே விடவில்லை!*
*மொத்தமாகத் தாமே*
*அழுது தீர்க்கிறார்கள்!*

*ப்ரிய பரதா!*
*நின் இழப்பினால்*
*வெகுண்டெழுந்த உன்*
*சகாக்கள் செய்த*
*சாகசங்கள்...*
*எங்கள் மண்ணிலே*
*பாசிச இரத்தம் பாய்ந்தோடுகின்றது!*

*ப்ரிய பரதா!*
*உன்னை எம் சொந்தமென்று*
*உரைக்க முடியாத வகையில்*
*ஊரே திரண்டு*
*உரிமை பேசுகிறது!*
*நீ ஈழ மைந்தன்*
*மண்ணின் மகன்!*

*ப்ரிய பரதா!*
*பருத்தித்துறையின் பாமரர் கூட*
*"மொறிஸ்" எங்கள் பாலனென்று*
*முந்தானையில் கண்ணீர் சிந்தி*
*முகம் சிவந்து மிக விம்மி*
*ஆறாத் துயரில் அரற்றுகிறார்கள்!*

*ப்ரிய பரதா*
*நீ மரணிக்க வில்லை*
*மக்கள் எழுச்சிக்கு*
*மீண்டுமோர் வித்தாகி*
*நம்மோடு வாழுகின்றாய்!*
*உன் தியாக விருட்சத்தில்*
*நிழல் காணும் நாட்கள்*
*வெகு தூரமில்லை!*

– *31.05.1989*

## மண்காக்கப் புறப்பட்டு
## விண்காக்கும் வீரவேங்கை மொறிஸ்

*இந்தியப் படையினர்க்குத்
துன்பியல் கற்பித்து
நம் தமிழ் ஈழத்தின்
வன்மை எடுத்துரைத்த
நின்புயற் சாதனைகள்
மூன்றாண்டு முடிந்த பின்னும்
முதுமையடையவில்லை.
சிறீலங்கா இராணுவத்தின்
சிம்ம சொப்பனமாகி
தொண்டைமானாற்றிலே
தொடர் புதை குழியமைத்தாய்
பசீலனுடன் படை நடந்து
பூநகிரியிலோர் கதை படைத்தாய்
பருத்திநகர்ப் பாசறைகள்
தரித்திருக்க முடியாமல்
சிதற வைத்தாய்! தலைவர்
கருத்துக்கள் வழி நடந்து
களம் சமைத்தாய்
மண்ணை, மக்களைக் காதலித்தாய்
புதுப்புது இளைஞர்களைப்
புலிப் படையிலிணைத்தாய்
மக்களின் மனம் புகுந்தாய்
மாற்றானின் மார்புகளைத்
துளைத்தெறிந்தாய்
எம் மண் நனைத்தாய்
யாவரையும் புலியாக்கி
யாகப் பெருநெருப்பின்
வீரத் தடங்களிலே விரைய வைத்தாய்
இன்றும், கருத்தரிக்கும் கல்லறையுள்
படுத்திருந்தவாறே - நீ
போருக்கனுப்பும் வீரர்கள் கொஞ்சமல்ல.*

# *வீர சுவர்க்கம் எய்திய வீரமறவன் மொறிஸ்*

*மண்ணின் மைந்தனே வீரவேங்கையே*
*விடுதலை விதைகளை வடமராட்சியில்*
*ஊன்றி விதைத்து விண்ணை ஆள்கிறாய்*
*கல்லறை வேங்கைகள் மண்ணில் விதைத்த*
*விதையுடன் சேர்ந்து வடமராட்சியில்*
*செழித்து வளருதுன் விடுதலை விதைகள்*
*பாத்தி கட்டி பசளை போட்டு*
*மக்கள் கண்ணீர் பயிரை வளர்க்குது*
*சுதந்திரப் பயிரும் வேகமாய் வளருது*
*வளரும் பயிரில் ஈழம் மலரும்*
*வீரமறவரும் நீயும் சேர்ந்து*
*காண்பாய் வேங்கையே விண்ணில் இருந்தே!*

*-01.11.1989*

# ஓ... மொறிஸ், மாவீரனே!

*மாற்றான் மார்புடைத்த மறப்புலி நின்*
*வீரத்தைச் சொல்லவா!*
*´மொறிஸ்‘ என்ற பெயர் கேட்டு*
*முகம் வெளுறி முதுகொடிந்த*
*இந்தியனின் விந்தையைச் சொல்லவா!*
*காட்டிக் கொடுப்போரால் - நீ*
*அபிமன்யு ஆன கதை சொல்லவா!*
*தோழரைக்காத்து நீ களத்திலே பாடிய*
*போர்ப் பரணியைச் சொல்லவா!*
*நீ மரணித்த பின்னும் குறி வைத்த படியே*
*கரத்தினிலே கிடந்த உன்*
*போர்க் கலனைச் சொல்லவா!*
*நீ உரமாகிப் போனதால்*
*உறுதியுடன் முளைத்த- புது*
*வேங்கைகளைச் சொல்லவா!*
*உன் நினைவோடு களத்திலவர்*
*கனவுகளை நனவாக்கும்*
*வேகத்தினைச் சொல்லவா!*

*–ஈழநாதம், 01.05.1991*

# நம் அருமைச் செல்வமே பரதா!

*மூன்றாண்டு சென்றாலும் உன்*
*சிரித்த முகம் தோன்றி வதைக்குதடா*
*தமிழ் ஈழமும் வந்திடுமே - நம்*
*தவச் செல்வர் வந்திடுவர் - என்று*
*காத்திருந்தோம் காத்திருந்தோம்*
*அந்நியப்படை வந்து*
*"மொறிஸ்.. மொறிஸ்.." என்று*
*கிலியில் அலைந்ததடா!*
*பட்ட துயர் போதுமென்று*
*பாரினில் உன் பேர் சொல்லி*
*எமை அழைக்க ஓர் புகழை எமக்கு*
*ஈந்து விட்டு எங்கு சென்று*
*மறைந்தாயடா எம் செல்வமகனே!*
*உன் கனவுகள் நனவாகுமென்று*
*காத்திருக்கிறோமடா செல்வமே!*

*-01.05.1992*

# நம் அன்புச் செல்வமே பரதா!

*நம் மண்ணில் சுதந்திரம் கண்ட பின்பு*
*நம் மனையில் இன்பம் காண்போம் என்றாய்!*
*வாலிப மனதின் ஆசைகள் மறந்து -வீரத்*
*தோள்களில் சுமையை ஏற்றிக் கொண்டாய்!*
*வீதிகள் தோறும் நடந்து வந்தாய்- தமிழ்*
*மக்களை மண்ணைக் காத்து நின்றாய்!*
*பெற்றவர் உள்ளம் வற்றிவிடாமல்- ஊர்*
*மக்களை உயிராய் மதித்து வந்தாய்!*
*என்றோ ஒரு நாள் வந்திடுவாய்*
*என்றே நாமும் காத்திருந்தோம்!*
*ஏற்றிய விளக்கு நாம் பார்த்திருக்கவே*
*காற்றினில் அவிந்து போனதடா!*
*நம் நெஞ்சங்களும் வெந்து போனதடா!*
*மகனே மகனே என்றோலமிட்டோம்*
*வண்ணச்சிரிப்புடனே நீ மறைந்து விட்டாய்!*
*மகனே உன் உடல் அழிந்தாலும*
*உன் மாண்புகள் கேட்டு உருகுகின்றோம்!*
*தாய் மண்ணிற்காக நீ மரணித்தாய்!*
*உனைப் பெற்றவள் நானுனை வணங்குகிறேன்!*

*-01.05.1994*

# அன்புச் செல்வமே ராஜன்!

என் இனிய, அன்புச் செல்வமே ராஜன்!
எமக்கு மூத்த முத்துச் செல்வமாக வந்துதித்தாயே!
எமதுயிராக வீடெல்லாம் தவழ்ந்தாயேடா!
"அம்மா, அம்மா" என்று கனிவாக அழைப்பாயேடா!
வன்னியில் வேரோடு வாழ்ந்தாயே மகனே!
குண்டடிபட்டுக் காலையிழந்து துடித்தாயேடா-மனம்
குன்றாது பேனாவால் சுட்டுத் தள்ளினாயேடா!
"பிரிய அம்மாவே!
ரீவியில் எங்களைப் பார்த்தீர்களா அம்மா?
கடிதங்கள் உங்கள் கையில் சேர்ந்தனவா அம்மா?
உங்களைப் பிரிந்து நான் எவ்வளவு
தனிமைப் பட்டேன் வேதனை உற்றேன் அம்மா!
நீங்கள் எங்களைக் கடலோரமாகக்
கண்டீர்களா அம்மா? - அதில் யார் நான் என
அடையாளம் காணமுடிந்ததா அம்மா?
குண்டடி பட்ட ஒருவனுக்கு அந்தச் சுமை
அதிகமானதுபோல உங்களுக்கு தெரிந்ததா அம்மா?"
என்றெல்லாம் கேட்டு - என் பிரிவின்
ஆற்றாமையைக் கொட்டி எழுதினாயேடா!
இப்போ நீ எங்கே போய் விட்டாய் மகனே?
பாரெல்லாம் புகழுமுன்னை நானெங்கு காண்பேன்?
நீ இல்லையே என்ற நினைவில் - என்னை
உறைய வைக்கும் தனிமை கொடுமையடா மகனே!
உன்னைப் போல் பிரியமாக இனி யார்
"அம்மா" என்றழைத்து இனிமையாக எழுதுவார்கள்?
என் பிரிய செல்வமே! உன்னை
எங்கு சென்று தேடுவேன்?
எங்குமே போகமாட்டாய் மகனே! என்
கூடவே தான் நீ இருப்பாய் - உன்
இனிய முகத்தை மானசீகமாய்
பார்க்கிறேனடா என் இனிய மகனே!

*-13.08.2000*

# எம் செல்வமே மயூரா..!

*குறையேதும் விட்டறியோம்
குறையெதுவும் கண்டறியோம்
பொறையிலே பூமிபோல் பிறந்த - உன்
பெருநோக்குக் கண்டு
நிறைவாக பலநினைந்து நாம் வாழ்ந்த நேரத்தில்
குறையாக நாமேதும் எண்ணாத போதினிலே
மறையாக நீ கண்ட தமிழீழ மந்திரத்தில்
சிறையாகித் தமிழர்கள் வாழ்ந்திடல் சீரில்லையென
உறைவாளும் துப்பாக்கியும் உன் தோளில் ஏந்தி நீ
கறையேதுமற்ற காவியம் படைத்திட விரும்பினாய்
திரைகடலாய் சூழ்ந்திட்ட தீபகற்ப எல்லையிலே
நிரையாக வீரரோடு
நீ சென்ற சரித்திரத்தை - பூநகரித்
துறையாகிய நாகதேவன் நம்மிடம் மீள வந்ததனை
மறைவாக நீ நின்று பார்க்குமிடம் ஏதென்று
முறையாக எமக்கு நீ சொல்வாயென்றேமாந்தோம்
வருவாய் நீ நிதமும் வண்ணமாகக் கனவினிலே
எழுவாய் நீ எமதெண்ணங்களில் எப்போதுமென்று
அருமையான அண்ணன் அன்றுனக்குக்
குருவாக உபதேசித்த கொள்கைக்குள் நின்றாயோ
திருவே! எம் செல்வமே! தீராத துக்கமுடன்
இருபேரையும் எண்ணி ஏங்குகிறோம் - எப்போதும்
கண்கள் உமைத் தேடுதடா
கால்கள் நாடியலையுதடா
கைகள் அணைக்கத் துடிக்குதடா
கருப்பையே கொதிக்குதடா
மறைந்தோடிப்போன மக்களே நீவிர் வாருங்கள்
விரைந்தோடி வந்தே உம் வீரக்கதை கூறுங்கள்
பிரிந்து நீவிர் நின்றிட்டால்
பெற்றவர் நாம் தாங்குவோமா!*

*- 01.05.1994*

# எம்மினிய மயூரனே!

*பூநகிரி நாகதேவன் துறையினிலே*
*நாயகனாய்*
*சரித்திரம் படைத்துவிட்ட*
*எம்மினிய மயூரனே!*
*மின்னும் வேளையிலே*
*மின்னாமல் முழங்காமல்*
*மண்ணில் மறைந்து விட்ட*
*எம்மினிய சபாவே!*
*பொன்னுடலைக் கூட*
*கண்ணில் காணாமல்*
*பொழுதெல்லாம் காத்திருந்தோம்*
*போரிலே வென்று நீ*
*மீட்சியுடன் வருவாயென*
*தேடினோம் உன்னை*
*படமாக வந்து நீ*
*புன்முறுவல் பூத்தாய்*
*பார்புகழும் மொறிஸான*
*உன் அண்ணன் இடந்தேடி*
*நீ சென்ற சேதியை*
*நாமறிந்த வேளையிலே*
*ஊரெல்லாம் அதிரும்படி*
*ஓலமிட்டழுதோமே..!*
*நீ ஏன் வரவில்லை..?*

*-02.05.1994*



'எனக்கு என் பிள்ளையின் வித்துடல் வேண்டும்'
நான் மந்திகை இராணுவமுகாம் நோக்கிச்
செல்வதற்குத் தயாரானேன். இராணுவம் நிச்சயம்
என்னை ஏதாவது செய்து விடும் என்று
எல்லோரும் அச்சப் பட்டார்கள். நான்
எல்லோரையும் அமைதிப் படுத்தி விட்டு
இராணுவ முகாம் நோக்கி நடக்கத் தொடங்கினேன்.
இராணுவ சென்றிப் பொயின்ற்றுகளிலிருந்து
துப்பாக்கி முனைகள் என் பக்கம் திரும்புவது எனக்கு
நன்றாகத் தெரிந்தது. அடுத்து வரும் நிமிடங்களில்
எதுவும் நடக்கலாமென்பதை நான் நன்கு உணர்ந்து
கொண்டேன். ஆனாலும் என்னைத் தைரியமாக
இயங்க வைக்கும் ஏதோ ஒரு சக்தி அப்போது
என்னை ஆட்கொண்டிருந்தது. எதற்கும் முகம்
கொடுக்கத் தயாராகவே நான் முகாம் நோக்கி
நடந்து கொண்டிருந்தேன். அரைவாசித் தூரம்
நடந்து கொண்டிருக்கும் போதே இராணுவக்
கொமாண்டர்கள் முகாம் வாசலுக்கு வந்து
என் வருகையைப் பார்த்துக் கொண்டு
நிற்பதைக் கண்டேன். வாசலை அண்மித்ததும்
"நான் மொறிஸின் அம்மா" என்றேன்.

- சிவா தியாகராஜா

மனஓசை வெளியீடு